விலை: 12.00 ரூபா

# வாழ்க்கை

சிறப்பாசிரியர்: புலவர் ஈழத்துச் சிவானந்தன்

ஈழத்துச் சோமகாந்தனும் பத்மா சோமகாந்தனும்




## இது ஒரு குடும்ப இங்கிதம்

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை ஒரு கேள்வியாம்
வாழ்க்கை ஒரு வேள்வியாம்

'வாழ்க்கை' இதழே

கேள்விக்குப் பதில் தருக!
வேள்விக்கு ஆகுதி ஆகும்.

# MALA TRADING COMPANY

GENERAL MERCHANTS DEALERS & IMPORTERS OF GLASSWARE
ALUMINIUMWARE ENAMELWARE AND PLASTIC GOODS

No. 32 DAM STREET
COLOMBO -12

Phone. 433991.

---

எல்லோரும் இன்புற்றிருக்க
'வாழ்க்கை' இதழ் வழிகாட்டியாகட்டும்.

# NEW KALYANI STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
WHOLESALE & RETAIL DEALERS IN GROCERIES & PRODUCE

189.5th CROSS STREET
COLOMBO - 11.

Phone : 20331



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

74

## வாழ்க்கை விளக்கம்

எல்லாம் விளங்குகின்றது வாழ்க்கை தான் விளங்கவில்லை. என்றான் ஒரு கவிஞன். கூட்டுவாழ்க்கை குடும்பவாழ்க்கை புரியவில்லையே என்றும் அவன் அங்கலாய்த்தான். தன்னைத் தான் விளங்கிக் கொள்ளுவதே முதலாம் பாடம். நான் ஆர் என் உள்ளம் ஆர் என் அறிவுகள் எவை என்ற வினாக்களுக்கு விடைகளை கண்டு கொள்ளவேண்டும், என் உள்ளத்து உணர்வுகளின் தன்மை என்ன ? என் உடம்பு இயக்கத்தின் தாற்பரியம் என்ன ?

என்னை அமைதிப்படுத்த ஆனந்தம் கொள்ளச் செய்ய என் உள்ளம் என்ன செய்ய வேண்டும் ? என் உடம்பு ஆரோக்கியமாய் செயல்பட்டு என் வாழ்க்கையை திருப்தியோடும் வெற்றியோடும் வாழ்ந்துமுடிக்க நான் எதனைக்கைக்கொள்ள வேண்டும் ?

என் நினைவுகளும் செயல்களும் செம்மையுற நான் எப்படி நினைக்கவேண்டும் ? எப்படி நடந்துகொள்ள வேண்டும் ? என்றெல்லாம் ஒருவர் சுயவிசாரணை செய்து கொண்டு தனது ஆசைகளுக்கு இடங்கொடுக்காது தேவைகளுக்கு வழி கண்டு வாழ்வாரேயானால் அந்த வாழ்க்கை வழுக்கலற்ற வளமானபோக்கில் நகர்ந்து கொண்டிருக்கும்.

நான் எங்கு போய்க் கொண்டிருக்கிறேனோ தெரியாது ஆனால் சரியான பாதையிலேயே போய்க் கொண்டிருக்கின்றேன். என்றார் ஒரு அறிஞர். சரியான பாதையில் போய்க் கொண்டிருந்தால் சரியானமுடிவை காண்போம் என்பது அவர் அறிவுரை. சரிகளைச் சரித்துவிட்டுப் போய்க் கொண்டிருக்கும் மனிதனோ குடும்பமோ சமுதாயமோ உரிய பயனைப்பெறப்போவதில்லை.

இதனைத் தெரிந்து கொண்டும் சரிகளைச் சரிப்பதையே சாதனையென்று எண்ணிக் கொண்டிருக்கும் மனிதர்கள் எப்போது சாந்தியடையப் போகிறார்கள் ? சரிகள் சாத்தியமாகவேண்டும் சரித்திரம் சந்தோஷமடைய வேண்டும்.

## எங்கள் இறைவா.!

வாழ்க்கைப் போக்கில் எழும் சந்தேகங்கள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டேயிருக்கிறது. உன் இருப்பு இரகசியமானதாகவே இருக்கிறது. நம்பிக்கை தளர் நிலைக்குத் தள்ளப் படுகிறது. காற்றாய் நீராய் கருணையாய் நீ அவ்வப்போது உதவுவது போதவில்லை.

நீ மருந்து கொடுக்கிறாயா விருந்து கொடுக்கிறாயா ? என்பது விளங்கவில்லை. தண்டிக்கிறாயா ? தண்ணளி செய்கிறாயா ? என்பதும் புரிவில்லை. உன்னை நம்பியவர்கள் தண்டனையைத் தண்ணளி என்று எண்ணுகிறார்கள். அடிக்கிறகைதான் அணைக்கும் என்று எதிர்பாாக் கிறார்கள்.

அடிக்கு மேல் அடித்தும் உன் ஆத்திரம் தீரவில்லையா ? அறியாமல் செய்த பிழைக்கும் அறிந்து செய்தகுற்றத்திற்கும் ஒரே அளவிலான அடிதானா ? நோவில் உறைப்பில் வித்தியாசங்கள் உண்டா ?

இறுக்கி ஓங்கி மெல்ல அடித்து நொருங்கவைக்கிறாயா ?

அடித்தது போதும் அப்பனே !
அணைத்திட வேண்டும் ஐயா !

முறைசெய்து காப்பாற்றும் உன்னைக் குறை கூறுவார் கூடக் கூடாது.

இறைவா உனக்காக அல்ல. உன்னவர்களுக்காக அருள்செய்க

வணக்கம் புலவர்

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
JAFFNA
LIBRARY,

# கண்ணதாசனைக் கண்டேன்

ஈழத்துச் சிவானந்தன்



கவிஞர் கண்ணதாசன்

## 4. தமிழ்க்கோயில் தரிசனம்

சிதம்பரம் புகையிரத நிலையத்தில் நண்பர் ஜெகதீஸ்வரன் நின்றார். ஊருக்குப்புதியவனான எனக்கு அவர்தான் வழிகாட்டி. அவர் எங்களூரைச் சேர்ந்தவர். வர்த்தகத்துறை மாணவராக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தார். சிதம்பரத்தில் இறங்கிய என்னை சிரித்த முகத்தோடு கைதந்தபடி எப்படிப்பயணம் என்று கேட்டார்.

பயண அனுபவங்களைவிட ஊர் அனுபவங்களையே கூடுதலாகச் சொன்னேன். பிறந்த பூமித்தாகம் தமிழ்த்தாகத்தைவிட மிஞ்சி நின்றது. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நெஞ்சக் குழியில் குமிழ் விட்டன. ஊர்விவகாரங்களைப் பற்றி ஜெகதீசன் கேட்ட கேள்விகளும் உள்ளத்தை உருக்கிவிட்டன. உறவினர் நிலைமைகள், கல்விகலை நிலைமைகள், விவசாயம், மழை, கோயில் திருவிழாக்கள், கல்யாணம், பிறப்பு, இறப்பு விவகாரங்களை அவர் விரிவாகக் கேட்டுக்கொண்டிருந்தார். என் நினைவுக்கு வந்தவற்றைச் சொன்னேன். அமைதிப்பூங்காவாய் இருந்த அந்தக் காலத்து எங்கள் பூமியின் புளகாங்கிதத்தையும் பூரிப்பையும் மண்வாசனையோடு கூடிய மகத்துவங்களையும் அவருக்குச் சொன்னபோது ஏற்பட்ட உணர்வுநிலையை இன்று நினைத்துப்பார்க்கும்போது கனல் கக்கிய பெருமூச்சே வெளிவருகிறது.

புகையிரத நிலையத்திலிருந்து அண்ணாமலைநகர் நோக்கி நாங்கள் ஏறியிருந்த குதிரைவண்டி போய்க்கொண்டேயிருந்தது. ஜெகதீசன் கதைத்ததுமுடிந்ததும், வண்டிக்காரன் பேசத்தொடங்கினான். 'ஏன் சார்... உங்க ஊர்ல மியூசிக் காலேஜ் ... கிடையாதா? ஏன் எல்லாரும் இங்கேயே படிக்க வாறாங்க இங்க படிச்சா உங்க் ஊர்ல மதிப்பா? நல்ல சம்பளம் தருவாங்களா? நாலுவருசம் படிக்கிறதென்னா என்ன செலவாகும்' என்றெல்லாம் அவன் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுவிட்டு நிறுத்தினான்.

''நாங்க மியூசிக்படிக்கிறவங்க அல்ல. நான் B.Com. படிக்கிறன். இவர் புலவர் படிக்க வாறார்'' என்றார் ஜெகதீசன்.

''அப்படீங்களா...! சிலோன்ல இருந்து வாரவங்க எல்லாரும் மியூசிக் படிக்கவாறதாத்தான் இங்க பேசிக் கொள்றாங்க!!

''அதிகமானவங்க மியூசிக் படிக்கிறாங்கதான்'' என்று ஜெகதீசன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். வண்டி பல்கலைக்கழக முகப்பில் வந்து நின்றது. பெட்டிகளை இறக்கிக் கொண்டு உள்ளே போனோம் திருவள்ளுவர் மனை என்றதொரு பெரிய கட்டிடத்தில் நிறைய அறைகள். மேல்மாடியிலும், கீழ்தளத்திலும் வரிசையாய் இருந்தன. ஜெகதீசனின் அறை கீழ் வீட்டில் இருந்தது. அந்த அறைக்குள் நான்கு கயிற்றுக் கட்டில்கள் கிடந்தன. மூங்கில் கம்புகளாலும் தென்னந்தும்புக்கயிற்றினாலும் உருவாக்கப்பட்ட அக்கட்டில்கள் ஸ்பிறிங் மெத்தைபோல் உட்கார்ந்ததும் ஆட்களைத் துள்ளவைக்கும். குளித்துவிட்டு இந்தக் கட்டிலில் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளு. இன்னும் ஒரு மணிநேரத்தில் மெஸ்ஸில் சாப்பிடலாம். சாப்பாட்டை முடித்துக்கொண்டு பின்னேரமாக சிதம்பரத்திற்குப் போகலாமென்றார் நண்பர்.

சாப்பாடு முடிந்தாலும் அப்பல்கலைக்கழகத்தை ஒரு முறை சுற்றிப்பார்க்க விரும்பினேன். நண்பரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம் 28-7-1993

சம்மதித்துச் சுற்றிக்காட்டினார். தமிழ்ச்சான்றோர்களின் பெயர்களைத்தாங்கிய விடுதிகள், தொல்காப்பியர் மனை, கம்பர் மனை, இளங்கோ மனை, சேக்கிழார் மனை, திருவள்ளுவர் மனை என்று எல்லாமே தமிழ்ப்புலவர்களின் பெயர்களைத்தாங்கிய விடுதிகளாய்க் கண்ணைக் கவர்ந்தன. விடுதிகளைத் தாண்டிப்போனால் வகுப்பறைகள், பெரிய நூல்நிலையம் சாஸ்திரி மன்டபம், கோகலே மண்டபம், இசைக் கல்லூரி அதற்குச் சற்றுதூரத்தில் திருவேட்களம் கோயில் இது திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற ஸ்தலம் தபால் கந்தோர், திறந்த வெளியரங்கு, மகளிர் விடுதி, ஒரு மைல் சுற்றளவுக்குள் இத்தனையும் அடக்கம்.

அருமையான சூழல், அன்னைத் தமிழின் ஆக்கத்துக்காய் செட்டிநாட்டரசர் ராஜாசேர் அண்ணாமலைச் செட்டியார் கட்டிய தமிழ்க்கோயில், தமிழிசைச் சங்கம் கண்ட பெருந்தகை இயல் நாடகம் உள்ளிட்ட முத்தமிழ் வளர்ச்சிக்கும் மற்றும் விஞ்ஞான மெய்ஞ்ஞான தொழில் நுட்பக் கல்விகளுக்குமாய் கண்ணதாசன் குறிப்பிட்டதுபோல் எண்ணாமல் எழுதாமல் அள்ளி இறைத்த வெள்ளிப்பணத்தால் உருவான அண்ணாமலைப்பல்கலைக்கழகம் அறிவுத்துறைக்கு பல வகையிலும் பணி செய்து வருகிறது.

மாலை சிதம்பரம் மாலை கட்டித் தெருவிலுள்ள ஆறுமுகநாவலர் தமிழ்க்கல்லூரிக்குப்போனோம் அதன் தலைமை ஆசிரியர் தம்பிராஜா அங்கிருந்தார். தம்பிராஜாவும் இலங்கையைச்சேர்ந்தவர். தமிழ் ஆங்கிலம் சைவசித்தாந்தத்துறைகளில் படித்துப்பட்டமும் தேர்ச்சியும் பெற்றிருந்தார். காலையில் தமிழ்வகுப்பு மாலையில் சித்தாந்த வகுப்பு என்று அக்கல்லூரியில் நடைபெற்றன. புலவர் புகு முக வகுப்புக்கும் பாடங்கள் நடக்கும். பல்கலைக்கழகப் புலவர் வகுப்புக்குப் புதுமுக வகுப்புப்படிப்புத் தொடர்பாக ஆலோசித்துவிட்டு இரவு எட்டு மணிபோல் திரும்பவும் அண்ணாமலை நகருக்கு அழைத்துப்போனார் ஜெகதீசன்.

போகும் வழியில் ஸ்ரேஷனுக்கு அருகில் ஒரு பெரிய ஹோட்டல் 'பலஸ்' என்று இருந்தது. வாண்டையார் மென்சன் என்றும் அதைச் சொல்வார்கள். அதற்குள் சாப்பிட அழைத்துப்போனார். அது அப்பொழுதுதான் சிவாஜி கணேசனால் திறந்து வைக்கப்பட்டு நடந்துகொண்டிருந்தது. சிவாஜிகணேசன் திறப்புவிழாவில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் முகப்பில் தொங்கின. அவற்றைப் பார்த்துக் கொண்டே சாப்பிடக்கூடியதாகயிருந்தது.

அன்று நடிகர் திலகமும் மக்கள் திலகமும் கலையுலகில் ஆட்சி செய்த காலம் அவர்களிருவருக்கும் ரசிகர்கள் மன்றம் தோன்றி வளர்ந்த காலம். தமிழநாட்டு அரசியல் பற்றி கதைக்கும் போது அவ்விரு திலகங்களைப்பற்றியும் பேச்சுவராமல் போகாது. அவர்களுக்கு அடுத்தபடியாகத்தான் பிறநடிகர்களைப் பற்றிய பேச்சுவரும் திரைப்படத்துறையில் அரசியல் அலை தமிழ் நாட்டில் வீசியதுபோல் வேறு ஏங்கும் வீசியிருக்காது என்று சொல்லாம். அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் திரைப்படத்துறையில் தமது எழுத்துக்களால் அரசியல் வாடையை வீசச் செய்தார்கள். இவர்களைப்போன்று திரைப்பாடல்கள் மூலம் அரசியலுக்கு மெருகு கொடுத்தவர் கவிஞர் கண்ணதாசன்.

திரைப்படத்துறையில் உள்ள முக்கியமானவர் பற்றி நோக்கும்போது கண்ணதாசனைக் குறித்த கூறும் கலந்து கொள்ளும். சிவாஜிகணேசனின் படத்தைக் காட்டி அந்த உணவு விடுதியின் வரலாற்றை ஜெகதீசன் சொல்லிக்கொண்டிருந்தார். இடையில் கண்ணதாசனைப்பற்றியும் கூறினார். கண்ணதாசனைக் காணவேண்டும், உரையாடி உறவாடவேண்டும் என்று எனது விருப்பத்தைச் சொன்னேன்.

கண்ணதாசன் தி. மு. கவிலிருந்து வெளியேறிவிட்டார். அவரும் பெரியார் ஈ.வெ. ராமசாமிநாயக்கரின் பெறாமகன் ஈ. வே. கி. சம்பத்தும் சேர்ந்து புதுக் கட்சி ஒன்று தொடங்கப்போகிறார்கள். இந்தப் பகுதியை தென்னாற்காடுமாவட்டம் என்று கூறுவார்கள் ஒரு கட்சியின் பிரசாரமென்றால் அது கட்டம் கட்டமாக மாவட்டம் தோறும் நடக்கும். இந்த மாவட்டத்திற்கு வரும்போது கண்ணதாசனைக் காணலாம். பல்கலைக்கழயத்திலுள்ள செட்டியார் பையன்கள் மூலமாக அவரை அணுகி உரையாடலாமென்று சொன்னார்.

எனக்கு அப்பொழுது செட்டியார், பிள்ளைவாள் ரெட்டியார், கவுண்டர், கோனார், நாடார், முதலியார் முதலிய வம்சங்கள் பற்றித் தெரியாது. செட்டியார் பையன்களென்றால்வியாபாரம் செய்கின்றபெடியன்களாக்கும் என்று நினைத்தேன். ஜெகதீசன் விளக்கம் தந்தார்.

இங்கு பலகட்சிகள் இருக்கின்றன. அக்கட்சிகளில் பிரமுகர்களாயிருப்பவர்களை சந்திக்க வேண்டுமானால் அவர்களுக்கு தெரிந்தவர்களோடு சென்று சந்திக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் வம்சத்திலுள்ளயாருடனாவது போனால்தான் பார்த்து பேச முடியும். இங்குள்ள வழக்கம் இது.

கண்ணதாசன் செட்டியார் வம்சத்தவர். அவரை சந்திக்க விரும்பினால் ஒரு செட்டியார்குலத்தவரோடு தான் போகவேண்டும். அவர் இருக்கும் இடத்திற்குள் அறிமுகம் இல்லாது நுழைய வேண்டுமானல் அவர் வம்சத்தைச் சேர்ந்தவர்களால் தான் முடியும். அவர் தங்கியிருக்கும் இடத்துவாசலில் நிற்பவருக்கு ''நான் செட்டிநாட்டவன் என்று ஒருவர் அறிமுகப்படுத்தினால்தான் வாசலைக்கடந்து உள்ளேபோகலாம். இது கண்ணதாசனுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமுள்ள பொதுவான வழக்கம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கல்போலும் கணவன்

-பொ. சண்முகநாதன்-

பிற்பகல் இரண்டு மணியளவில் அந்த பஸ் வந்து தரிப்பில் நின்றது. பஸ்சிலிருந்து இறங்கிய வசந்தி தனது கைக்குழந்தையைத் தோளிலும் நான்கு வயதுச் சிறுவனை நடத்திக்கெகண்டும் அந்தத் தனி வழியே நடக்கலானாள்.

ஊரின் ஒதுக்குப் புறத்திலுள்ள அந்த வீட்டைச் சென்றடைய இன்னும் அரைமைல் தூரம் நடந்ததாக வேணடும். அதுவும் அந்தச் சிறுவனின் நடை வேகத்திலேதானே நிகழ வேண்டும்.

அதிகாலையில் கணவனின் வீட்டிலிருந்து புறப்பட்டவள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு ஒரு பஸ்சிலும், அங்கிருந்து அத்தி பூத்தாற் போலப் புறப்படும் இந்த பஸ்சுக்குக் காத்திருப்பதிலும் இத்தனை நேரமாகிவிட்டது. அந்தக் களைப்பு வேறு அவளுக்கும் குழந்தைகளுக்கும்:

வழிநெடுக ஒருபுறம் பசுமை நிறைந்த நெல். வயல்களும் மறுபுறம் தென்னம் தோப்புக்களுமாகக்காட்சியளித்தன. அந்தப் பாதையோரத்திலேயே அவளது சோதரியின் நெற்காணியும் இருக்கிறது. அதைக் கவனித்தாள்...

பயிர்கள் யாவும் நன்றாகச் செழித்து வளர்ந்து நிறைமாதக் கர்ப்பிணிகளைப் போலக் கதிர்களைத் தள்ளியிருந்தன. அவள் இந்தமுறை குத்தகைக்குச் செய்துள்ள வயல்கூடச் சோடை போயிருக்கவில்லை.

''இந்தமுறை அண்ணனுக்குச் 'சா' வெள்ளாமை என எண்ணியவள் கூடவே 'கட.வுளே அதற்கு ஒரு விக்கினமும் வந்துவிடக் கூடாது' என நல்லூர் முருகப் பெருமானிடம் வேண்டியும் கொண்டாள்.

'அண்ணன் எப்படியும் இந்தமுறை தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடுவான்' என்ற மகிழ்ச்சி ஒருபுறமும், 'அதுவரை தன் கணவன் பொறுத்துக் கொள்வானா?' என்ற கவலை மறுபுறமுமாக வசந்தியை அலைக்கழித்துக்கொண்டிருந்தன.

அவளது சிறுவன் ஒரு கட்டத்தில் 'இனி முடியாது' என அடம்பிடித்தான். வசந்தி வேறுவழியின்றி அவனையும் தூக்கி மறுதோளில் வைத்துக் கொண்டு மீதிவழி நடந்தாள்.

அவள் வீட்டை அடைந்தபோது சாமிநாதன் தனது இரண்டு ஜேசி மாடுகளையும் பால் எடுப்பதற்காக அவிழ்த்துக் கட்டிக்கொண்டிருந்தான். பூரணம் கணவனுக்கு உதவியாக வாளிகளையும் போத்தல்களையும் கழுவிக் கொண்டிருந்தாள். அன்னம்மா பழைய விதானையார் வீட்டுக்குக் கிடுகுகள் பின்னுவதற்காகப் போயிருந்தாள்.

வசந்தி இப்படி இழுத்துப் பறித்துக்கொண்டு கையிலை கழுத்திலை ஒன்றுமில்லாமல் கணவன் துணையின்றி வருவது இதுதான் முதற்தடவையல்ல

அவள் இப்படி வந்தால் அவள் கணவனால் விரட்டப்பட்டே அப்படி வந்திருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு சாமிநாதன் கவலைப்படுவான் அவளை இந்தக்கோலத்தில் பார்க்கவா தான் இத்தனை பாடுபட்டேன் என்று துயரமிகுதியினால் அவன் துடித்துப்போவான்.

அவளும் காரணத்தை விவரமாகத்தமையனிடம் விவரிப்பதில்லை. தமையனின் நிலைமையை நன்றாக புரிந்துகொண்ட அவள், அவன் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசத் தெரியாதவன் என்பதையும், வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லவில்லை என்பதையும் அறிவாள். அதனால் அவள் அடிக்கடி இங்கு வந்து அந்தச் செயல் மூலமே அவனுக்குத் தனது நிலைமையை உணர்த்திவிட்டுச் சில தினங்கள் தங்கி விட்டுச் செல்வாள். வேறென்ன செய்ய முடியும் அவளால்...?

வசந்தி தனது தந்தையின் முகம் தெரியாமலே வளர்ந்தவள். அந்தக் குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் தானே தனியாக ஏற்றுச் சுமந்து வந்தவன் சாமிநாதன். வசந்தியைக் கவலை தெரியாமல் வளர்த்து 'நல்ல இடத்தில்' கொடுப்பதற்காகவும், தாயார் அன்னம்மாவுக்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக் கொள்வதற்காகவும் அவன் எவ்வளவு தூரம் 'மாடாய்' உழைத்து ஒடாய்த் தேய்ந்திருக்கிறான்?

அவள் செல்வராசாவுக்கு வாழ்க்கைப்பட்ட பின்னர் அவன் ஓரளவு ஆறுதலடைந்தவனாக தனது நாற்பது வயதில் சென்ற ஆண்டில் தான் திருமணம் செய்துகொண்டான். ஆனால் அந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் நெடுநாள் நீடிக்க வில்லை...

வசந்தியின் திருமணத்தின்போது சாமிநாதன் அவளுக்குப் போதியளவு நகைகள் போட்டு அனுப்பியிருந்தான். ரொக்கமாகவும் ஓரளவு கொடுத்திருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். தனது வீட்டையும் அவர்களுக்கே எழுதினான். வீட்டைக் கையளிக்கும்போது அவனுக்குச் சிறிது யோசனைதான். அவனது விவசாய முயற்சிகளும் பாற்பண்ணைத் தொழிலும் அந்த வீட்டை மையமாக வைத்தே அதைச் சுற்றியே நடந்துகொண்டிருப்பதால் எதிர்காலத்தில் அவைகள் பாதிக்கப்படுமோ என்று அஞ்சினான்.

அவனது அச்சத்தை புரிந்துகொண்ட செல்வராசா அவனுக்கு ஆறுதல் சொன்னான்.

'மச்சான் ஒன்றுக்குமே யோசிக்க வேண்டியதில்லை. அவரும் மாமியும் எவ்வளவுகாலம் வேண்டுமானாலும் வீட்டிலே இருக்கலாம். அதை நாங்கள் தடுக்கப்போவதில்லை நாங்கள் இப்போதைக்கு இங்கு வந்து இருக்கப்போவது மில்லை. ஆனால் சீவியம் அது இது என்று எதுவும் வைத்து எழுதினால் நாங்கள் அதைவைத்து கடன் கிடன் எடுப்பது சிரமமாக இருக்கும்....'

அவனுக்கு அந்த நேரத்திலும் கடன் பற்றிய எண்ணம்தான்.

மைத்துனனின் பேச்சுக்கு சாமிநாதன் மறுவார்த்தை பேசவில்லை. அவ்னது உள்ளம் மட்டுமல்ல வெள்ளை... மனமும்; வெளுத்ததெல்லாம் பால் என எண்ணும் இயல்புடையது.

செல்வராசா தனது சீதன வீட்டை விற்று அந்தப் பணத்தில் தனது இடத்தில் ஒரு காணி வாங்கி வீடுகட்ட விரும்புவதாகவும், அதற்காகவே வசந்தியை இப்போது அடிக்கடி சாமிநாதனிடம் தூதனுப்பிக் கொண்டிருந்தான்...

அப்படி விற்பதாயிருந்தால் அதைத்தானே எடுப்தாகவும், ஆனால் அதற்குப் போதியகால அவகாசம் தரவேண்டும் என்றும் சாமிநாதன் ஆரம்பத்தில் சொல்லியிருந்தான்.

இப்படியிருக்கும் போது ஒரு நாள் வீட்டுக்கு இருபத்தையாரம் ரூபா விலை மதிப்பிட்டு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அத்தொகையை த் தரா விட்டால் வீட்டைத்தான் வேறு யாருக்கேனும் விற்கப் போவதாகச் செல்வராசா செய்தி அனுப்பினான்.

அதற்கு சாமிநாதன் ஓரளவு தன்னைத்தயார்ப்படுத்தினான்; ஏற்கனவே சேர்த்துவைத்த பதினைந்தாயிரத்துடன், மனைவியின் நகைகள், மாடு ஒன்று இவைகளை விற்பதற்கு ஒழுங்கு செய்து எழுதுவதற்கும் நாள் குறிப்பிட்டபோது மீண்டும் ஒரு பேரிடி... செல்வராசா வீட்டின் விலையை முப்பதாயிரம் என உயர்த்தித்தூதனுப்பினான். சாமிநாதன் மீண்டும் காலக்கெடு கேட்டான்.

செல்வராசா அதற்குச் சம்மதிப்பதாயில்லை 'வாங்குவதற்கு வேறு சிலர் தயாராக இருக்கிறார்கள்' என நச்சரித்துக்கொண்டிருந்தான்.

வசந்திக்குத் தனது கணவன் வீடு விற்றதும் அந்தப் பணத்தைக்கொண்டு தனது இடத்தில் காணி வாங்கி வீடு கட்டுவான் என்ற நம்பிக்கை இல்லாவிட்டாலும் தமையன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என விரும்பினாள். அவள் எவ்வளவு காலம்தான் கணவனால் விரட்டப்பட்டுக்கொண்டும் கணவன் வீட்டாரின் இழிமொழிகளையும் பழிச்சொற்களையும் கேட்டுக்கொண்டும் இருப்பாள்? அதனால் அவள் இந்தமுறை கொஞ்சம் கண்டிப்பாகவே சாமிநாதனிடம் நினைவூட்டி விட்டு வந்தாள்.

வசந்தி வந்ததும் செல்வராசா கேட்டான். 'என்னவாம் கொண்ணர்?'

''பதினைந்தையும் இப்ப கொண்டுவந்து காணியை வாங்கட்டுமாம். மிகுதியை எப்படியும் தை மாதத்திலை தந்துவிடுகினமாம். முடியாவிட்டால் வீட்டை விட்டுப்போய்விடுகினமாம்''

'சனியன்கள் நெடுகத்தானே போகினம்'' என்ற செல்வராசா' உந்தப் பதினைந்து ரூபாவைத்தான் ஒரு வருடமாகப் பூதம் காத்தமாதிரி வைத்துக்கொண்டிருக்கிறாரா' என்றாள்.

'ரூபா இல்லையுங்கோ. பதினைந்தாயிரம்...... என்று திருத்தினாள் வசந்தி.

செல்வராசா அவள்மீது சீறிப்பாய்ந்தான். 'எனக்சா படிப்பிக்கிறாயடி மடைச்சி'

இடையில் புகுந்துகொண்ட செல்வராசாவின் தாயார் அவையளைச் செவியிலை பிடித்து இழுத்தெறிந்துவிட்டு காணியை யாருக்காவது வில்லடா' என்றாள்.

மாலை நேரம் சாமிநானும் அவன் மனைவி பூரணமுமே வீட்டில்இருந்தார்கள் வீட்டுக்குமுன்ஒழுங்கையில் கார் ஒன்று வந்து நிற்கிறது. அதிலிருந்து செல்வராசாவும் இன்னும் நான்கு இளைஞர்களும் இறங்கி வருகிறார்கள்.ஒவ்வொருவருக்கும் நான்கு கால்கள்.

சாமிநாதன் தனது மைத்துனனின் 'புதிய' தோற்றத்தையும் அவனது அந்த 'நல்ல' நண்பர்களையும் கண்ட மாத்திரத்தே வேதனையடைந்தாலும் அதை வெளிக்காட்டாமல் அவர்களை வரவேற்றான்.

செல்வராசா 'இவர்கள் கொழும்பிலிருந்து வந்திருக்கிறார்கள். முதலில் குடிக்கக் கொஞ்சம் தண்ணி ...' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிநாதனுக்கு உள்ளே நல்ல தண்ணீர் இல்லை என்பதும் அதற்கு அரைமைல் தூரம் போய்வரவேண்டும் என்பதும் நினைவுக் வர அதைப் புரிந்துகொண்ட பூரணம்' இருங்கோ தம்பியவை... இதோ வந்து விடுகிறன்' என்றவாறு ஒரு பானையுடன் வெளியேறினாள்.

பூரணம் வெளியேறியதும் செல்வராசா தன்னுடன் வந்தவர்களுக்குக் கட்டளையிட்டான். என்ன பார்த்துக்கொண்டிருக்கிறியள்...ம்... நடக்கட்டும்...'

வந்தவர்களில் ஒருவன் வீட்டின் சீற்கூரைகளையும் தகர அடைப்புக்களையும் கழற்றி எடுப்பதிலும் அப்படி முடியாத விடத்து உடைத்து எறிவதிலும் ஈடுபட்டான்.

இன்னொருவன் மாட்டுத்தொழுவத்துக்குள் நுழைந்து மாடுகளைக் கட்டறுத்து அவைகள் மீது எதையோ வீச அவைகள் பரிதாவமான ஒலிகளை எழுப்பியவாறு தலை தெறிக்க ஓடின.

செல்வராசா வீட்டுக் கதவில் திறப்பு இருக்கக் கூடியதாக அதைக் காலால் உதைந்து உடைத்தான்...

உடைத்த கதவின் வழியே உள்ளே சென்று மற்றொருவன் உள்ளேயிருந்த பொருட்களையெல்லாம் எடுத்தெடுத்து வெளியே முற்றத்துக்கு எறிந்தான்...

வேறொருவன் கழற்றிய சீற்றுக்கள் தகரங்கள் போன்றவைகளைத் தூக்கிக்கொண்டுபோய் காரில் ஏற்றினான்.

தான் சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடும் சேர்த்த செல்வங்களும் தன் கண் எதிரிலேயே சிதறிச் சின்னாபின்னப் படுவதைக் கண்ட சாமிநாதன் மிகவும் பரிதாபமாகக் கேட்டான் ''என்ன மச்சான் இதெல்லாம்?''

''அதுவா'' என்ற செல்வராசா உங்களுக்கு வாயால் சொன்னால் விளங்காது... அதுதான் என்றான்

''அதுதான் பதினைந்தாயிரத்தையும் வைத்துக் கொள்ளச் சொன்னேனே... மிகுதிக்குத் தவணை கேட்டிருந்தேனே''

''உப்பிடி எத்தனை தவணை சொல்லியாச்சு நான் என்ன பேயன் என்ற நினைப்பா உங்கலுக்கு''? செல்வராசா கத்தினான்.

''அப்படிச் சொல்வேனா? இந்த்முறை வெள்ளாமையும் பிழையில்ல...

''சென்ற முறை வெள்ளம் அழிச்சுப் போட்டுது என்றீர் இந்த முறைமாடுகள் அழிச்சுப் போட்டுதுஎன்று சொல்லப்போகிறீர் இதுதான் நடக்கப்போகுது''

''அப்படிச் சொல்லக் கூடாது மச்சான் போன முறை ஒருவருக்கும்தான் பலிப்பில்லாமல் போச்சுது. நான் என்ன வைத்துக்கொண்டா இல்லை என்கிறன் என்ற சாமிநாதனின் கண்களில் கண்ணீர் வெள்ளமெனப் பெருகியது. தொடர்ந்து தட்டுத் தடுமாறிய வாறு சொன்னான்''. 'நான் என்ன வீண்செலவு சித்தாயம் செய்கிறேனா? கெட்ட சகவாசங்களோடு சேர்ந்து குடித்துக் கும்மாளம் அடிக்கிறேனா?''

செல்வராசா அவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அவ்வளவும் நீ செய்யவில்லை... நான் செய்கிறேன் என்கிறாயா உலுத்த நாயே'' என்றவன் தொடர்ந்து அவனின் கழுத்தை நெரித்து உலுச்கித் தள்ளிவிட்டான்.

சாமிநாதன் மயங்கிய நிலையில் மல்லாந்து விழுந்தான்.

தண்ணீர் எடுக்கச் சென்ற பூரணம் திரும்ப வந்தபோது வீடு இருந்த இடம் சுடுகாடுபோலக் காட்சியளித்தது. மயான அமைதி அங்கு நிலவியது. சாமிநாதன் இறந்து கிடந்தான். அவனுக்கு அருகே திறந்த நிலையில் கிருமிநாசினிப் போத்தல் ஒன்று—

★ ★ ★

சாமிநாதன் காலமாகி ஒரு வாரமாகிவிட்ட நிலையில் ஒரு நாள்—

இப்பொழுது அன்னம்மா, பூரணம், வசந்தி, அவர்களின் குழந்தைகள் ஆகியோர் தூரத்து உறவு முறையான ஒரு குடும்பத்துடன் ஒட்டியிருந்தனர்ந் அவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்து இனித்தான் தீர்மானிக்கவேண்டும்

செல்வராசா கூட்டத்தினர் சில வினாடிகள் ஆடிய வெறியாட்டம் இவர்களை அநாதைகள் ஆக்கியதுடன், இவர்களின் எதிர்காலத்திலும் கேள்விக் குறிகளை எழுப்பியிருந்தன...

சாமிநாதன் காலமான செய்தி வசந்திக்குத் தெரிவிக்கப்பட்டு, அவளும் குழந்தைகளும் இங்கு வரவழைக்கப்பட்டனர். உடைந்த உருக்குலைந்த வீட்டிலேயே அவனது இறுதிச் சடங்குகள் நடந்தேறின. செல்வராசாவோ அவனது வீட்டுக்காரர்களோ அதிலே கலந்துகொள்ள வில்லை. வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணையில் மட்டும் அவர்களிற் சிலரின் தலைகளைக் காணமுடிந்தது.

(27ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

-தம்பிஐயாதேவதாஸ்

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கிரேக்க தத்துவ ஞானி ஒருவர் தன்மாணவர்க ளிடம் ஒரு வாக்கியத்தை கூறினார்.

ஹெராக்லிடஸ் என்னும் அந்ததத்துவ ஞா னி என்ன கூறினார் தெரியுமா எல்லாம் மாறுதல் அடை யும் இந்த தத்துவத்தை தவிர மற்ற எல்லாமே மாறு தலடையும் என்றார் அவர்.

ஒரு மனிதன் இரண்டு முறை ஒரே ஆற்றில் குளி க்க முடியாது என்றும் அதே தத்துவஞானி குறிப்பி ட்டார்.

அதாவது ஆறானது, ஒவ்வொரு கணமும் மாறி க்கொண்டே செல்கிறது அதில் குளிக்க இறங்கிய மனிதனும் மாறிக் கொண்டே செல்கின்றான் என் பதே அதன் அர்த்தம்.

வாழ்க்கை என்பது கூட ஒரு முடிவற்ற மாறுத தான்.

நிச்சயம் என்று, நாம் ஒன்றைக் கூறுவதானால் இன்றைய தினம் என்பதைவிட 'இந்த நிமிடம்* என்று கூட சொல்லி விடலாம்.

ஆனால் நம்மில் பலர் நிச்சயமற்ற தன்மைக ளால் மூடப்பட்டிருக்கும் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்திக்கின்றார்கள் இன்றைய தினத்தை கோட்டை விட்டு விடுகின்றோம்.

மாணவர்களுக்குத்தான் இந்த இன்றைய தினம் நன்கு பொருந்தும். இன்றைய தினத்தில் அவா கள் கற்கவேண்டியதைக் கற்கவேண்டும் இன்றைய தினத்தை விட்டு எதிர்காலத்தில் கற்போம் என்று எண்ணுவார்களானால் அவர்கள் இலவு காத்த கிளி போலாவார்கள்.

'இன்றைய தினத்தைப்பற்றிப்பிடி என்பது றோ மானியப் பழமொழி

மாணவர்கள் கல்வியிலும், மற்றவர்கள் தம் கட மையிலும் இன்றைய தினத்தைப் பற்றிப்பிடித்தால் வெற்றி நிச்சயம்.

நாம் விரும்பாத வேலைகளையோ தொழிலையோ செய்யும் பொழுது நமக்கு பெரும் கஷ்டமாக இருக் கும் வெகு விரைவில் களைப்படைந்து விடுகிறோம், துக்கம், தூக்கம், கண்வலி, கால்வலி, தலைவலி என்று எல்லாமே வந்து விடும்.

ஆனால் ஒருவேலையை விருப்பத்துடன் செய்யும் பொழுது அது எத்தனை கஷ்டமாக இருந்த போதி லும் நமக்கு களைப்பே தெரிவதில்லை கஷ்டமே புரிவதில்லை.

சில நல்ல புத்தகங்களைப் படித்து பார்த்திருக் கிறீர்களா ? அ வை அளவில் எத்தனை பெரிய புத்தகங்களாக இருந்தபோதிலும் அவைகளை வாசித்து முடிக்கின்ரவரை எமக்கு களைப்பு ஏற்படு வதில்லையல்லவா?

நாம் விரும்பும் தொழிலை எத்தனை உற்சாக த்துடன் செய்கிறோமோ அத்தனை உற்சாகத்துடன் நாம் விரும்பாத தொழிலையும் செய்யவேண்டும் அவ் வாறு செய்ய நம்மையே நாம் பழக்கிக் கொள்ள வேண்டும்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு இம் முறை மிக முக்கியமாகும் எத்தனை கஷ்டமான கல்வி யாக இருந்தாலும் விருப்பத்துடன் பயிலவேண்டும்ர்

அறிஞர் வில்லியம் ஜேம்ஸ் என்ன கூறுகிறா. தெரியுமா?

''நாம் தைரியமுள்ளவர்கள்போல் நடிக்கவேண் டும். அப்பொழுது உண்மையிலேயே தைரியம் உள்ளவர் களாகவே மாறிவிடுவோம் நாம்மகிழ்ச்சி யுள்ளவர்கள் போல் நடக்க வேண்டும் அப்பொழுது மகிழ்ச்சி உள்ள வர்களாகவேஆகி விடுகிறோம்.

என்று கூறினார் அந்த அறிஞர்.

ஆகவே ஒரு மனிதன் ஒருவேலையை விரும்பினா லும் சரி விரும்பாவிட்டாலும் சரி உற்சாகத்துடன் செய்து முடிக்க வேண்டும்.

ஒரு மாணவன் ஒரு பாடத்தை விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி உற்சாகத்துடன் படித் தல் வேண்டும்.

இவ்வாறு உற்சாகத்துடன் படிக்கும் பொழுதும் பல வேலைகளை செய்து முடிக்கும் போதும் முன்பிரு ந்த கவலையும் களைப்பும் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

நாமும் எந்த காரியத்தையும் விருப்பத்துட செய் து வெற்றி காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாமுலை உவந்து

சு. வில்வரத்தினம்

1. உட்குவிந்த நாணத்தின் சுடர்மொட்டு
உள்ளழகு.
அகத்துள் குழையவரும் மென் மணம்
இளமை போர்த்திய நாணத்தின் இதழ்கள்
இயற்றும் மெய்த்தவக் கற்பு.

இளமெய்த்தவ முதிர்வில்
இனிதூரும் விரல் கொண்டு தென்றல்
நீவிவிடப்
போதின் மலர்வு.
புகுவண்டு கண்படுப்ப.
இனிதான கல்யாணம்.

தாளமில்லை மேளமில்லை.
நாதச் சிறகுகள் நடுங்க
பூவிரிவுள் பொறிவண்டு
தேனுண்ணும் அழகு.

பூவின் காம்பூடு சுவறிய கலப்பின் சுகம்
கொடியின் நாளங்களெலாம் பரவி
வேரடி வரையில் போய் உசுப்ப
மென்நடுக்கக் கங்கை புரள்கிறது
கருங் கூந்தல் விரிய.

காலாதிகாலமாய் ஓடுகிற கங்கைதான்
இங்குப் புரள்கிறாள்.
சூரிய சந்திரர் தம் சுடர் முகம் பார்த்ததும்,
களவு சுவைத்த இந்திரன் வாய் கழுவிச்சென்றதும்
இதே கங்கையில் தானோ?

கங்கை புரள்கிறாள்
கற்பின் பொற்தவம் மெய்விரிந்தேற்ற
புளகாங்கிதம் நெளிய
கங்கை புரள்கிறாள்

2. லிங்கேச்வரன் சிரிக்கிறான்
உருவொழிந்த மன்மதம்
எய்த மலர்கள் காலடியில்
கண்நிறைந்த நகைப்போடு.

அவனிட்ட திரிசடையெனத் திகழ் மலையிருந்து
உந்தி விழும் கங்கையின்
நிர்வாண நெகிழ்வோட்டக் கரையிலே
தவத்தீ வளர்க்கும் பார்வதி இமைநெகிழ்ப்பாள்

'சக்தி!'
காலநதிக் கரைதாண்டிக் கூவும் குரல்
நாதப்பறை முழங்க நடனிக்கும்
கழலொலி காதில் உறைசலிட
பாதக் கொலுசின் பவித்திர ஓசை
பெயர நடக்கின்றாள் பார்வதி
பங்கைப் புணர்கின்றாள் பேதமற.
லிங்கோற்பவம்
சிருஷ்டியின் லீலை.

லிங்க பூஜையில் வாய்நெகிழ்ந்த மலர்வின்
மகரந்தம் ஏந்தி
வண்டறையும் சோலை.
வையகத்தின் காலை.

3. காலை.

தந்தையுடன் கைகோர்த்து வந்த சம்பந்தன்
படிக்கரையிருந்து பார்க்கின்றான்.
நீருள் மூழ்கிய தந்தையைக் காணவிலை.
குரலெடுத்துக் கேவியழுகிறான்

''அம்மையே அப்பா''

துண்டப் பிறை எட்டிப் பார்க்கிறது
தோடுடைய செவியன் சிரிக்கிறான்.
உண்ணாமுலைச்சி கறந்தளித்த கலசத்துள்
பால் கங்கை புரள்கிறால்

மழலை இதழோரம்
விளிப்பு காட்டிய ஞானப்பால்

தந்தை அதட்ட
நளினவிரல் சுட்டிய திக்கிலே
உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்'

மழலை வாய்க்கரையில்
மடைதிறந்த பண்ணின் பாய்வில்
கங்கை படையா திரண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் இதழ் தொடர்

# கம்பனில் வாழ்வியல் விழுப்பொருள்கள்

பேராசிரியர்
அ. ச. ஞானசம்பந்தன்

ஆனால் பகை என்ற ஒன்று உண்டா? யார் பகைவர்? யாருக்கு யார் பகை? உயிர்கள் மற்ற உயிர்களுடன் பகைப்பது முறையா? காரணம் இல்லாமல் போர் புரியக்கூடாது; என்றால் காரணம் இருந்தால் மட்டும் போர் புரியலாமா? மாற்சரியமே கூடாது என்ற பின் 'பகைவர், உறவினர் என்று யாருமே இருக்க முடியாதே! அப்படி இருக்க நேர் நின்று பேரரிடுதல், மறைந்து நின்று போரிடுதல் என்பவை அர்த்தமற்ற வெற்றுரைகள் அல்லவா? விருப்பு வெறுப்பு இல்லாமல் சமதிருஷ்டியுடன் இருப்பவன் ஒருவனைக் கொல்கிறான் என்றால் அது அறுவை மருத்தவன் செய்யும் ஆப்பரேஷன் போன்றதல்லவா ? அறுவை மருத்துவம் செய்யும்பொழுது நோயாளி இறந்துவிட்டான் என்றால்யாரேனும் மருத்துவனைக் குறைகூறுவார் களா? இம்மாதிரிக் கோணத்தில் நின்று நடைபெற்ற நிகழ்ச்சிகளை வாலி ஆயத்தொடங்கிவிட்டான். அதற்குரிய மனப்பக்குவத்தை அவன் இப்பொழுது பெற்று விட்டான், அந்தப் பக்குவம் அவனுக்கு வரக் கீழே கொடுக்கப்பெற்றுள்ளவை துணைபுரிந்தன.

(1) இராமனைக் காணுமுன் அவன்மாட்டு வாலிகொண்டிருந்த பெருமதிப்பு.

(2) மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத் திரத்தைக் (கண்களில்) தெரியக்கண்டது.

(3) கமலம் பூத்த கார்முகிலைக் கண்ணுற்றது

(4) இராமன் சொற்களாலும், அம்பாலும் செய்த உபதேசம்.

இந்த நான்கின் எதிரே இராமன் மறைந்து நின்று அம்பு எய்ததும், நியாய அநியாயங்களும், போர் அறம் எனக் கூறப்பெற்ற சட்ட திட்டங்களும் பொடி சூரணமாகிவிட்டன; இந்த நான்கும் சித்தித்த பிறகு அனைத்தும் பிள்ளை விளையாட்டு. எனவே அவற்றுக்கு எவ்வித மதிப்பும் தர வாலி தயாராகவில்லை. ஒரு கோடு எவ்வளவு பெரியது என்று நினைத்தாலும் அதனையடுத்து மற்றொன்று அதைவிட நீளமாகப் போட்டுவிட்ட பிறகு பழைய கோடு மதிப்பை இழந்துவிடுதல் போல இப்புதிய பார்வையில் பழைய விழுப் பொருள்கள் சிறப்பு இழந்து விடுகின்றன. இப்புதிய பார்வை வருமுன்னர் அந்த விழுப் பொருள்கள் மிகப்பெரியவை: மிக உயர்ந்தவை. புதிய பார்வை வந்துவிட்ட பிறகு அவ்விழுப் பொருள்கள் மிக அற்பமானவையாய் மிகச் சிறியனவாக ஆகிவிட்டன. இத்தனையும் மனத்துட் கொண்டு வாலியினுடைய மாற்றத்தைக் கவிஞன் கூற முற்படுகிறான் ஆம் வாலி முற்றிலும் மாறிவிட்டான். அதாவது வாலி அதுவரை கொண்டிருந்த விழுப்பொருள்கள் அனைத்தும் மாறிவிட்டன, எனவே சிறியவையாக மாறிவிட்ட அந்தப் பழைய விழுப்பொருள்களை இப்பொழுது வாலி நினைக்கக்கூட விரும்பவில்லை என்கிறான் கவிஞன். 'சிறியன சிந்தியதான்' என்ற அடைமொழியை வாலிக்குத் தருகின்றான் கவிஞன்.

வாலியின் விழுப்பொருள்கள் மாறிவிட்டன என்பதை எவ்வாறு அறிய முடிகிறது? இந்த இராமனை பரதன் முன் தோன்றினாயே!' என்று ஏசினானோ அந்த இராமனை இதோ பேசுகிறான்.

> ''தாய் என உயிர்க்கு நல்கி. தருமமும், தகவும்
> சால்பும் நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்
> கும் நேர்மை நாய் என நின்ற எம்மால் நவை அற
> உணரலாமே?
> தீயென பொறுத்தி!'' என்றான்—சிறியன ''சிந்தியா
> தான்''
>
> (வாலி—வ. 122)

இராமனைத் தாய் என்று கூறுவதோடு அமையாமல் தருமம், தகவு. சால்பு என்பவற்றின் வடிவம் என்றுங் கூறுகின்றான்.

யார் வயிற்றைக் கிளிக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளாமல் கிழிக்கப்படும் செயலை மட்டும் பார்த்த ஒருவன் இது கொலை என்று கூறுகிறான், சில வினாடிகளில் கிழிப்பவர் மருத்துவர் என்று பேசுகிறான், இரண்டிலும் நடைபெறுவது அறுவை தான் என்றாலும் இரண்டுக்கும் இடையே விழுப்பொருள் மாறிவிடுகிறது. இதே நிலையில் வாலி இருந்தமையில் விழுப்பொருளில் மாற்றம் கண்ட பிறகு சிறியன சிந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் நடைபெற்ற நிகழ்ச்சியை நோக்கினான். உடன் அதன் சிறப்பு தெரிய தொடங்கிறது, இராமனைத் தாய் என்றும் சால்பு ஊன்றிய தூண் என்றும் பேசத் தொடங்கி விடுகின்றான்: முன்னர் விழுப்பொருள்களாகக் காட்சியளித்தவை இப்பொழுது அற்பமாகத் தோன்றத் தொடங்கிவிட்டன. அவற்றைச் சிறியன என்று கூறினான் கவிஞன். வாலியை 'சிறியனசிந்தியா' தான் என்று கூறுவதன் பொருள் இதுவேயாகும். எனவே வாலி திடீரென்று மனம் மாறக் காரணம் இலக்குவன் தந்த விடையன்று. இராகவன்பால் பெற்ற உபதேசத்தால் வாலி திடீரென்று வளரத் தொடங்கிவிட்டான். அவனுடைய இந்த ஆன்ம வளர்ச்சியால் புதிய ஒரு பார்வையை அல்லது கண்ணோட்டத்தைப் பெறுகிறான். எல்லையில்லாத ஆனந்தத்தில் அமிழ்ந்துவிடுகிறான். இந்த ஆன்மிக வளர்ச்சியில் நின்று அதனால் பெற்ற புதிய கண்ணோட்டத்துடன் இந்த உலகில் உள்ள சட்ட திட்டங்கள், விழுப்பொருள்கள் ஆகிய அனைத்தும் இப்பொழுது அற்பமானவையாக அவன் கண்ணுக்குப் படுகின்றன.

முன்னர் உலகியல் நிலையில் நின்று பார்க்கையில் சிலகட்டுப்பாடுகள் இருந்தன. தூரப்பார்வை இல்லை. எதிர் காலத்தை அறிய முடியவில்லை, விருப்பு வெறுப்புக்கள் நிறைந்திருந்தன. நண்பர், பகைவர் நொதுமலர் என்ற வேறுபாடுகள் இருந்தன. இன்னுங் கூற வேண்டுமானால் நன்மை—திமை பகை—நட்ப்பு; ஒளி—இருள் பாவம்—புண்ணியம் என்ற இரட்டைகள் இப்பொழுது அர்த்த மற்றவையாகி விட்டன; கீதையின் வழியில் கூறவேண்டுமானால் வாலி ஸ்திதப் பிரக்ஞ்ஞ' னாகிவிட்டான் 'சமதிருஷ்டி' பெற்று விட்டான்; எனவேதான் பழைய விழுப்பொருள்கள் சிறியனவாகி விட்டன. இப்பொழுது புதிய விழுப்பொருள்களை பெற்றுவிட்டன (New Values) இந்தப் புதிய விழுப்பொருளை எவ்வாறு பெற்றான் எப்பொழுது பெற்றான்? இதோ அவனே விடை கூறுகிறான்

> ''ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
> ஆவிபோம் வேலைவாய், அருள் தந்து அருளினாய்
> மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
> பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!
> (வா.வ. 123)

ஆம்! எப்பொழுது புதிய விழுப்பொருளைப பெற்றான்? ஆவிபோம் வேளையில் பெற்றானாம். எவ்வாறு பெற்றானாம்? ஏவுகூர் வாளியால் பெற்றானாம் பெற்றதனால் விளைந்த பயன் யாது? துவந்தங்கள் எனப்படும் இரட்டைகள் அறவே ஒழிந்து சமதிருஷ்டி கிடைத்தது. இதைத்தான் வாலி விளக்குகிறான். இந்த விழுப்பொருள் கிடைக்குமுன் உன்னை தசரத புத்திரன் இராமன் என்று நினைத்து, என் உயிரைப் போக்கும் பகைவன் என்று எண்ணி நீ பாபம் செய்து விட்டாய் என்ற முடிவுக்கு வந்து உலகம் உள்ளளவும் பழி பூண்டுவிட்டாய் என்று கருதிவிட்டேன். இப்புதிய அறிவை நீ தந்தவுடன் நீ தசரதன் புத்திரன் அல்ல நீயே மூவர்! நீயே முதல்வன் நீ தான் புகழ்! நீ தான் இகழ்: நீ தான் பாபம்! நீ தான் புண்ணியம்; பகையும் நீயே உறவும் நீயே! உன்னை அன்றி மற்றும் ஒன்றும் இல்லை என்ற புதிய விழுப்பொருளைப் பெற்று விட்டேன் என்று கூறுகிறான் வாலி.

இன்னும் ஒரு படி மேலே சென்றும் பேசுகின்றான்: இயங்கியற்பொருள், நிலையியற் பொருள் (சரஅசரம்) களாக உள்ளான். பூவும் அதில் உள்ள மணமும்போல எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கின்றவன் என்று அறிஞர் கூறுவதை இன்று உணர்ந்துகொண்டேன் என்ற பொருளில்.

> 'யாவரும் எவையுமாய், இருதுவும் பயனும் ஆய்
> பூவும் நல்வெறியும் ஓத்து; ஒருவ அரும் பொதுமையாய்
> ஆவ நீ ஆவது' என்று அறிவினார்; அருளினார் தாவ
> ரும்பதம் எனக்கு அருமையோ? தனிமையோய்
> (வா.வ.131)

என்றும் கூறுகிறான். வாலியின் மனத்தில் நிகழ்ந்த இந்த விழுப்பொருள் மாற்றத்தை உணர்ந்து கொண்டவன் (Change in values) இராமன் ஒருவனேயாவான்.

நல்லதொரு சந்தருப்பங் கிடைத்தவுடன் தான் கொண்டிருந்த விழுப்பொருள்களை மாற்றிக்கொண்டான் வாலி. அதனால் உடனடியாகத் தேவர்கட்கும் கிட்டாத வீடு பேற்றைப் பெற்றுவிட்டான் என்கிறான் கவிஞன். ஆனால் இதே கம்பன் மற்றொரு பாத்திரத்தின்மூலம் என்ன நிகழ்ந்தாலும் தான் கொண்ட விழுப்பொருள்களை மாற்றிக்கொள்வதில்லை என்ற உறுதியுடன் உயிரை விடுகின்ற நிகழ்ச்சியையும் காட்டிச் செல்கிறான்.

போர்க்களத்தில் வந்து நிற்கும் கும்பகருணனைய கண்ட இராமனே வியப்பெய்துகிறான், அவனுடைய நேர்மையைப் பற்றி வீடணன் கூறி இந்த நல்லவனைக் கொன்று ஒரு பயனும் இல்லை. அறிவுரை கூறிஇவனை அழைத்து வருகிறேன் என்று இராமனிடம் அனுமதி பெற்றுக்கும்பனிடம் வருகிறான் வீடணன். அவனைக் கண்ட கும்பகருணன் வியப்பும் வருத்தமும் ஒருங்கே எய்தியவனாய் 'ஏன் நீ என்னிடம் வந்தாய்? இறக்கும் தறுவாயில்இருக்கும்எங்களைநாடிவருவது நியாயமா?' என்றே கருத்தில்.

> 'கவிஞரின் அறிவு மிக்காய் காலன்வாய்க் களிக்கின்
> றேம்பால் நவைஉற வந்தது என் நீ? அமுது உண்பாய்
> நஞ்சு உண்பாயோ?
> (கும்ப. வதை-131)

என்று பேசுகிறான். வீடணன் பக்குவமாகக் கும்பனிடம் பேசத்தொடங்கி 'நீ இதுவரை உன் வாழ்நாளை வீணாளாக உறங்கியே கழித்துவிட்டாய்! வேதங்களை கற்ற நீ இப்பிறவி நோயிலிருந்துவிடுபட வேண்டாமா? இராமனிடம் சரணம் புகுந்து விட்டால் இலங்கை அரசுடன் வீட்டரசும் உனக்கு நல்குவான்' என்று பல்வேறு காரணங்களைக் காட்டிப் பேசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடணனிடம் எல்லையில்லாத அன்பு பூண்டவன் கும்பகருணன். ஆனால் அண்ணன் தம்பியராகிய இவர்கள் இருவருக்கும் விழுப்பொருள்கள் வேறு வேறு. இராமனிடம் சேர்வது.

'மருள் உறு பிறவி நோய்க்கு மருந்தும் ஆம்; மாறிச்செல்லும்'
உருள்உறு சகட வாழ்க்கை ஒழித்து வீடளிக்கும் ..
(கு. வதை—139)

என்று கருதுபவன் வீடணன். வீடணனைப்போலவே கல்வி, கேள்வி ஞானங்களில் நிறைந்தவன்தான் கும்பகர்ணனும் என்றாலும் என்ன? இருவருடைய விழுப்பொருள்களும் இருவேறு துருவங்களாக விழுப்பொருள்கள் இருப்பினும் ஒருவர்மாட்டு ஒருவர் கொள்ளும் அன்பு இதனால் குறைய வேண்டியதில்லை என்பதையும் எடுத்துக்காட்டவே கவிஞன் இந்தக் காட்சியை அமைத்துக்காட்டுகிறான்.

அண்ணனாகிய கும்பனைத் தன்னுடன் வருமாறு வேண்டிய வீடணன் தரையில் வீழ்ந்து அண்ணனை வணங்குகிறான். வணங்கும் தம்பியை எடுத்து மார்புறப் புல்லிக் கண்ணீர் சோரப் பேசுகிறான் கும்பகர்ணன். தன் முடிவையும் தமையன் முடிவையும் மிக நன்றாக அறிந்திருந்தான் கும்பன். என்றாலும் என்ன? வீடணன் இம்மையில் இலங்கை அரசும் மறுமையில் கிடைக்கும் என்று கூறினதால் தன் விழுப்பொருளை மாற்றிக்கொள்ள இசைந்தானா கும்பன்? அப்படியானால் அவனுடைய விழுப்பொருள்தான் என்ன?

'ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது
(157)
'தம்பியர் இன்றி மாண்டு கிடப்பனோ தமையன்'
(158)
'(யமனிடம்) துணை இன்றி (அண்ணன்) சேரல் நன்றோ?'

இவ்வாறு அண்ணனிடம் தன் கடமை உணர்ச்சியை வெளிப்படுத்தினான். இனித்தன் வீரத்தின்பால் அவன் கொண்ட உறுதி வருமாறு:

'கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கொண்டேன்(160)
'பனி துடைத்துஉலகம் சுற்றும் பாரதியின்திரிவென்'
'கறங்கு எனத் திரிவென்'
'ஒருவரும் திரிய வொட்டேன் உயிர் சுமந்து உலகில்
(163)

இவைதான் கும்பகருணனுடைய விழுப்பொருள்கள். இவ்வாறு கூறுவதால் முட்டாள்தனத்துடன் பகைவனின் வன்மை அறியாமல் தன்னைப்பற்றி உயர்வாக நினைத்துள்ளானோ என்று யாரும் நினையவேண்டியதில்லை. தன் முடிவு என்ன? இராவணன் முடிவு என்ன? இலங்கை அரக்கர் முடிவுயாது என்பவற்றை மிக நன்றாக அறிந்த ஒருவன் இலங்கையில் உண்டு என்றால் அவன் கும்பகருணன்தான். என்றாலும் என்ன? தான் கொண்டிருந்த விழுப்பொருள்களை விட்டுகொடுக்கவோ வேறு விழுப்பொருள்களை ஏற்றுக் கொள்ளவோ அவன் தயாராக இல்லை. தம்பியாகிய வீடனுக்கு இராமனிடம் சரணமாதல்தான் தக்கது என்பதையும் தான்போர் புரிந்து மரணமடைவதுதான் புகழ் என்பதையும் நன்கு அறிந்தவனாகலின் அவரவர் விழுப் பொருள்களை அவரவர் காப்பதே முறை என்று கருதினான். எனவே களத்தில் வீடணனிடம் பேசும்போது

'மலரின்மேல் இருந்த வள்ளல் வழுஇலா வரத்தினால்
உலைவு இலாத் தருமம் பூண்டாய்; உலகு உளதனையும் உள்ளாய்
தலைவன் நீ, உலகுக்கு எல்லாம்; நினைக்கு அது (சரணம் அடைதல்) தக்கதேயால்
புலைஉறு மரணம் எய்தல் எனக்கு இது புகழதேயால்'
என்று திட்டவட்டமாகக் கூறுகிறான்.

மனிதன் ஒருவனுக்குத்தான் விழுப்பொருள் என்ற ஒன்று உண்டு. குறிக்கோளுடன் வாழவேண்டும் என்று நினைப்பவன் தான் மனிதன், குறிக்கோள் இலாத வாழ்க்கை விலங்கு வாழ்க்கையேயாகும். அந்தக் குறிக்கோள் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் இருக்கவேண்டுமாயின் வாழ்க்கையில் சில உயர்ந்த விழுப்பொருள்கள் இருத்தல் வேண்டும். இலக்கியத்தில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் விழுப்பொருளை உயிரினும் மேலாகப் போற்றும் பாத்திரங்களாகத்தான் அமையும். அதில் தனிமனித விழுப்பொருள் சமுதாய விழுப்பொருள் என இருவகை உண்டு. தனிமனித விழுப்பொருள்களை மாற்றிக் கொள்கிறவர்களும் உண்டு; மாற்றமறுப்பவர்களும் உண்டு. அதேபோலச் சமுதாய விழுப்பொருள்கள் காலத்துக்கு ஏற்பமாறும் இயல்புடையன. தனி மனிதர்களால் கொண்ட விழுப்பொருள்களும் தக்க காரணங்களால் மாறும் இயல்புடையன. உறவு காரணமாக இருவர்க்கு ஓரே வகையான விழுப்பொருள்தான் இருக்கவேண்டும் என்ற தேவை இல்லை. ஆக விழுப்பொருள் இல்லாதவன் மனிதனே இல்லை என்பது கம்பநாடன் காட்டும் உண்மை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜலதோசமும் வாழ்த்தும்

கவிஞர் அகளங்கன்

ஜலதோசம் ஏற்பட்டால் தும்மல் வரும் ஆனால் தும்முவதற்கு ஜலதோசம் தான் காரணம் என்று சொல்ல முடியுமா? யாராவது ஒருவர் எங்களைப் பற்றி நினைத்தால் அல்லது, கதைத்தால் நாங்கள் தும்மி விடுகிறோம், என்பது ஒரு ஐதீகம்.

அது எப்படி என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் இன்றும் நடைமுறையில் ஜலதோசம் இல்லாமல் அல்லது வேறு காரணங்கள் இல்லாமல் திடீரெனத் தும்மினால் யாரோ எம்மை நினைக்கிறார்கள், கதைக்கிறார்கள் என்று கூறிக் கொள்கிறோம்.

திருக்குறளில் வள்ளுவர் கூட திடீரெனத் தும்மு இந்த நிகழ்ச்சிக்கு இதே காரணத்தையே கூறுகிறார். ஒரு தலைவனும் தலைவியும் சந்தோசமாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

திடீரெனத் தலைவன் தும்முகிறான். தலைவி அவனை வாழ்த்திவிட்டு, உடனே அழுகிறாள். ஏன் அழுகிறாள் என்பது தலைவனுக்குத் தெரியாது. அவளே கூறுகிறாள்.

''உங்களை யாரோ நினைக்கிறார்கள்''
''யாரும் நினைத்தால் நீ ஏன் அழவேண்டும்'' என்று கேட்கிறான் தலைவன்.

பெண்ணல்லவா சந்தேகம் தான். யாரோ ஒரு பெண்தான் தனது தலைவனை நினைத்திருக்க வேண்டும் என்று நினைத்து விடுகிறாள். அதனால்தான் அழுதாளாம்.

''வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினர் என்று''

''எந்தப் பெண் உங்களை நினைத்தாள், நீங்கள் தும்மினீர்கள்'' என்று கேட்டு அழுகிறாள் வள்ளுவரின் திருக்குறட் தலைவி.

தும்மினால் உடனே அருகில் இருப்பவர் ''நூறாண்டு வாழ்க'' என்று வாழ்த்துவது எமது வழக்கம். இங்கும் தலைவன் தும்மியதும் தலைவி வாழ்த்துகிறார்கள்.

இதே போல இன்னொரு தலைவன் தலைவி, அவர்களுக்கிடையே சிறு ஊடல், அதாவது பொய்க் கோபம் இருவரும் ஒருவரோடொருவர் பேசாமல் இருந்தனர். யார் முதலில் பேசுவது என்று இருவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். காத்துக்கொண்டிருந்தனர்.

தலைவன் திடீரெனத் தும்மினான். தலைவி தன்னை மறந்து பழக்க தோஷத்தில் 'நீடு வாழ்க' என்று வாழ்த்தி விடுகிறாள். ஊடல் தீர்கிறது.

''ஊடி யிருந்தோமாத் தும்மினார் யாம் தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து''

திடீரெனத் தும்முவதற்கு காரணம் புரிகிறது. தும்மியவுடன் ஏன் வாழ்த்துகிறார்கள். எல்லோரையும் வாழ்த்திப் பழக்கப்பட்டதாலா.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று கூறுபவர்கள் தமிழர்கள். ''இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க'' குறைவிலாது உயிர்கள் வாழ்க'' என்று எல்லோரையும் வாழ்த்தி மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் தமிழர்கள். அதனால் தான் இந்தப்பழக்கமோ—

திடீரெனத் தும்முவது நோயல்ல அது உயிரைப் போக்கக் குடியது மல்ல. ஆனால் மற்றவர்கள் சிறு துன்பத்துக்கு ஆளானாலும் அவர்களை வாழ்த்தி உற்சாகப்படுத்தி வாழச் செய்யும் பழக்கம் உடையவர்கள் தமிழர்கள்!

ஆங்கிலேயர்கள் இருவர் உரையாடும்போது, திடீரென ஒருவர் தும்மி விட்டால் என்ன நடக்கும், தும்மியவர் தானே (Sorry) வருந்துகிறேன் என்று கூறுவர். அதாவது தனது தும்மல் தனக்குப் பக்கத்தில் இருப்பவருக்கு கஸ்டத்தைக் கொடுத்துவிட்டது என்பதற்காக தானே வருந்திக் கொள்கிறார்.

தும்முவதால், தும்மியவருக்கு ஏற்பட்ட சங்கடம் தீருவதற்கு முன்பாக மற்றவருக்கு சங்கடம் கொடுத்து விட்டேன் என்று மேலும் சங்கடப்படுவார் அவர்.

இதுவும் நல்ல பண்பாடுதான். இருப்பினும் எங்கள் பண்பாடு மேலானதுபோல் தான் தெரிகிறது எல்லோரும் வாழவேண்டும் என்று எப்பொழுதும் வாழ்த்துவது எமது வழக்கம்.

தீபாவளி, தைப்பொங்கல்வருடப்பிறப்பு, பிறந்தநாள், திருமணம் என்று எல்ல நிகழ்ச்சிகளின் போதும் வாழ்த்துகிறோம்; சாதாரண வாழ்த்தல்ல ''நீடூழி வாழ்க'' என்ற அளவில் வாழ்த்துஊழிக்காலம் அதாவது உலக முடிவுக் காலம் வரை வாழ்வதில் அவ்வளவு கொள்ளை ஆசையுண்டு எம்மவர்க்கு.

அவ்வளவு ஆசையோடு வாழும் தமிழர்கள், இன்று அற்ப வயதுகளில் அவலமாகச் சாக வேண்டி ஏற்படுகிறது. எங்கள் வாழ்த்துக்கள் பலிக்க வில்லையா. ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் ''வணக்கம்'' என்று சொல்லி கதையை ஆரம்பிப்பது போல வாழ்த்தும் சொல்லி கதைக்க ஆரம்பித்தால் இன்னும் உற்சாகமாக இருக்கும் போல் தெரிகிறது.

''வணக்கம்'' என்று வாழ்த்தி விட்டு உரையாடத் தொடங்கினால் இன்றைய நிலையில் எமக்கு உற்சாகமாக இருக்கும்போல் தெரிகிறது வாழ்த்துக்களும் எங்களைக்காக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாற்றல் (Creativity)

கொ. றொ. கொண்ஸ்ரன்ரைன்

விஞ்ஞானத்திலும் சில இலக்கியத் துறையிலும் படைப்பாற்றல் என்பது துறை சார்ந்த ரீதியில் ஒரு வரது முக்கியத்துவத்தை நிரனயிக்கும் காரணியாக விளங்கிறதி.

படைப்பாற்றலைப்பற்றி விளங்கிக் கொள்வது துறைசார்ந்த ரீதியில் ஒருவரது முக்கியத்துவத்தையும் அத்துறையின் வளர்ச்சிக்கு அவர் செய்யும் பங்களிப்பையும் விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது.

படைப்பாற்றல் புதிதாக ஒன்றைப் படைத்தல் என்பதனை மட்டும் குறிக்காது, புதிய அணுகுமுறைகளை வகுத்தல். புதிய பரிமாணத்தை ஏற்படுத்தல் இதுவரை அறியப்படாத விடயங்களை விளக்குதல் போன்ற செயற்பாடுகளைக் குறித்து நிற்கிறது.

வழமைக்கு மாறான சிந்தனைப் போக்குகளில் சென்று, அல்லது வழமைக்கு மாறான அணுகுமுறைகளினூடாக கருத்துக்களை அல்லது விடயங்களை ஆராய்ந்து அதின் யதார்த்த பரிமாணத்தில் பயனுள்ள விளைவுகளாகக் கொண்டு வரும் ஆற்றலே படைப்பாற்றலாகும்.

இங்கே யதார்த்த பரிமாணத்தில் அதன் பயன்பாடு முக்கியமாக உணரப்படவேண்டும். மனநோயாளிகூட தான் பெரிய படைப்பாளி எனக் கருதிக் கொண்டு, விஞ்ஞான சூத்திரங்களையும் ''படைப்புகளையும்'' செய்கிறான். ஆனால் இவையெல்லாம் சமூக யதார்த்தத்தில் பயனற்றவையாக, எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்தாதவையாக இருப்பதை நாம் காணலாம். இதுவே மனநோயாளியின் ''படைப்பிற்கும்'' ஒரு படைப்பாளியின் படைப்பிற்கும் இடையில் காணப்படும் முக்கியமான வேறுபாடாகும்.

அத்துடன் ஒரு படைப்பானது சமூக மட்டத்தில் முக்கியத்துவம் பெறுவதற்கு படைப்பாளிக்கு சமூக யதார்த்த மயப்படுத்தப்பட்ட சிந்தனைப் போக்கு மிக அவசியம். அந்நிய சமூகக் கலாசாரப் பின்னணிகளில் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள், கொள்கைகள், போக்குகள் விழுமியங்கள் என்பவற்றை புத்தகங்களின் வாயிலாகவும் பிரதேச கல்வி வாயிலாகவும் பெற்று, அதே சிந்தனைப் போக்குகளை சமூக யதார்த்த மயப்படுத்தாமல் படைப்புகளில் பிரதிபலிக்கும்போது, அப்படைப்பானது படைப்பாளியின் படைப்பாற்றலை அச்சமூகத்தில் வெளிபடுத்த தவறிவிடுகிறது.

நுண்ணறிவுத்திறனுக்கும் (Intelligence) படைப்பாற்றலுக்கும் இடையிலிருக்கும் வேறுபாடுகளை விளங்கிக்கொள்வது, படைப்பாறலை விளங்கிக் கொள்வதற்கு அவசியமாகிறது. நுண்ணறிவுத்திறன் மிக்கவர் சிறந்த படைப்பாளியாக இருப்பார் எனக் கூறமுடியாது.

சாதாரணமாக வகுப்பறைச் சூழலில் கெட்டிக்காரன் பட்டம் பெறுபவர்கள் இந்த நுண்ணறிவுத்திறன் மிக்கவர்கள். படைப்பாற்றல் மிக்கவர்கள் பாடசாலைச் சூழலில் குழப்படிகாரர்களாகவும். சாதாரண அமைவுகளுடன் ஒத்துப்போகாதவர்களாகவும், ஆசிரியர்களினால் விரும்பப்படாதவர்களாகவுமே பெரும்பாலும் காணப்படுகிறார்கள். இதன் முக்கிய காரணம் அவர்களது எதிர்வு கூறமுடியாத சிந்தனைப்போக்கும் செயற்பாடுகளுமாகும். சாதாரணமாக நுண்ணறிவுத்திறனைச் சோதிக்கும் பரீட்சைகளில் இவர்கள் குறைந்த மதிப்பெண்களையே பெறுகிறார்கள்.

கல்வி அமைப்புகள் படைப்பாற்றல் உள்ள மாணவர்களை இனங்காண்பதிலோ, அப்படிப்பட்ட ஆற்றலை வளர்த்தெடுப்பதிலோ அக்கறை காட்டுவது இல்லை. அவை சமூகத்துடனும் சாதாரண அமைவுகளுடனும் ஒத்துபோகும் (Conformity) தன்மையையே வலிந்து ஏற்படுத்த முனைகின்றன. இதனால் நுண்ணறிவுத்திறன் மிக்கவர்கள் கிரமக் கடமைகளைக் கொண்ட (R0utini) தொழில்துறைகளில் முடங்கிவிடுவதினை நாம் காண்கிறோம்.

படைப்பாற்றல் மிக்கவர்கள் அநேகமாக சமூகத்தில் இருந்து வேறுபட்டே நிற்கிறார்கள். தம்மைப் பற்றியும் தமது படைப்பாற்றல பற்றியும் இவர்களிடத்தில் தீர்க்கமான ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதனால் இவர்கள் தம்மையும் தமது குறைபாடுகளுடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவமுடையவர்களாகப் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். கருத்துக்களோ, புகழோ இவர்களைப் பெருமளவில் பாதிப்பதில்லை. தாம் கொண்டிருக்கும் கருத்துக்களை வெளிக்கொண்டுவரும் அவா இவர்களுக்கு இருந்து கொண்டே இருக்கும். இவர்கள் பெரும்பாலும் அகவய நோக்குடையவர்களாகவே (Introverted) இருக்கிறார்கள்.

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாற்றல் மிக்கவர்களில் அநேகர் மன நோயாளிகளாகவோ அல்லது மனநோய்க்கு உட்படும் சாத்தியக்கூறு உடையவர்களாகவோ இருக்கிறார்கள் என்று ஒரு கருத்து நிலவிவருகிறது. ஆனால் அண்மைக் காலங்களில் பல படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாற்றினை ஆராய்ந்தவர்கள் இக் கருத்து ஆதாரமற்றது எனவும், ஒருசில உதாரணங் ங்களை முன்வைத்து எடுக்கப்பட்ட தவறான முடிவெனவும் காட்டியுள்ளார்கள்,

படைப்பாற்றலுக்கான அடிப்படை உந்தல் மூன்று வழிகளில் பெறப்படுகிறது, முதலாவதாக பரம்பரையலகுக் காரணியூடாக (benetic fnetor). இது ஒருவரின் பெற்றோரிலிருந்து பெறப்படும் பரம்பரையலகு கூட்டங்களில் காணப்படுகிறது, இப் பரம்பரையலகுக் காரணிகளில் சில படைப்பாற்றலுக்கான தனிப்பட்டவையாகவும் சில படைப்பாற்றலுக்கும் நுண்ணறிவுக்குமான பொதுவானதாகவும் காணப்படுகின்றன இதில் குடும்பத்தினதும் சமூகத்தினதும் தாக்கும் படைப்பாற்றலின் தன்மையை நிர்ணயிக்கின்றன.

பெற்றோர்களால் கொடுக்கப்படும் ஊக்குவிப்புக்களும் படைப்பாற்றலை வளர்த்தெடுப்பதற்கு முக்கியமாக விளங்குகின்றன சமூக நிகழ்வுகளும் சமூக அமைப்பும் எந்தத்துறையில் ஒருவரது படைப்பாற்றல் செயற்பட போகிறது என்பதை, தீர்மானிப்பதில் முக்கியம் பெறுகின்றன,

படைப்பாற்றலின் வெளிப்பாடு ஒருவரின் அனுபவத்தாலும், தேடலால், பெறும் அறிவினாலும் கற்பனா சக்தியினாலும் மெருகூட்டப்படுகிறது, சாதாரணமாக ஒருவனின் அவதானத்தினூடாக பெறும் விடையங்கள் சில, அறிவியல், கருத்துக்களுடன் அசாதாரண ரீதியில் தொடர்பு படுத்தி அர்த்தமுள்ள விளைவுகளை ஏற்படுத்தும் போது படைப்பாற்றல் வேண்டப்படுகிறது.

இந்த அவதானமும் துறைசார்ந்த அறிவும் பெருமளவு தேவைப்படுவது கவனிக்கத்தக்கது. துறைசார்ந்த ரீதியில் ஒருவன் போதியளவு அறிவு பெறாதவிடத்து ஏற்கனவே அத்துறையில் படைக்கப்பட்டவைகளுக்கான ஆராச்சிகளிலேயே, அவர் தனது காலத்தைப் போக்கிக் கொண்டிருப்பர். இது விஞ்ஞானத் துறைக்கும் சரி கலை இலக்கியத்துறைக்கும் சரி பொதுமைப்படுத்தப்படக் கூடிய ஒரு விடையமாகும்.

சில வேளைகளில் படைப்புகள் சாதாரண சமுதாய மக்களால் விளங்கிக் கொள்ள முடியாமற் போகிறது. இதன் முக்கிய காரனங்களில் ஒன்று படைப்பாளியின் சமூக ஆட்டத்தினையும் கடந்து நிற்கும் சிந்தனைப் போக்காகும் சாதாரன மக்கள் இதனை விளங்கிக் கொள்வதற்குக் காலம் செல்லும் இதனாலேயே சில படைப்பாளிகளின் முக்கியத்துவம் (குறிப்பாக சிலதுறையில்) அவர்களது இறப்பிற்குப் பின்பே உணரப்படுகிறது.

படைப்பு என்ற தொழிற்பாடு நான்கு கட்டங்களில் திகழ்வதாக (வலஸ்Walas) என்ற உளவியலாளர் கூறுகிறார். முதலாவதாக ஆயத்தநிலை (Prcparation) இந்நிலை பல்வேறுபட்ட அனுபவங்கள் கருத்துக்கள் என்பவற்றை இணைத்து ஆராயும் ஒரு தொடக்க நிலையாகும்.

இரண்டாவதாக, வெளிப்பாடு அற்ற நிலை (Ineubation) இந்நிலையில் செயற்ப்பாடுகள் பெருமளவு ஆழ்மனத்தில் தெளிவிலா உணர்நிலையிலேயே திகழ்கின்றன அடுத்ததாக உள்ளுணரும் நிலை (Inspiration) இது வெளிப்பாடற்ற நிலையிலிருந்து சடுதியாக ஏற்படுகிறது. ஆழ்மனநிலையிருக்கும் செயற்பாடு சடுதியாக உணர்நிலையினை அடைகிறது. இது சில வேளைகளில் கனவு நிலையிலும் ஏற்ப்படலாம் (பென்சீன் வளையத்திற்கான Bengenl rmy) கட்டமைப்பு கனவிலேயே பெறப்பட்டது.

கடைசி நிலை மீள் ஆய்வு நிலை (Veritication) இது முக்கியமாக விஞ்ஞானப் படைப்புகளுக்கே தேவைப்படும் ஒரு படியாக அமைகிறது.

படைப்பாற்றல் பல காரணிகளால் பாதிக்கப்படலாம். உளப்போராட்டங்கள் படைப்பாற்றலினைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாகும் தொடர்ந்து வேலை செய்தால், நிர்வாகப் பொறுப்பு, தொழிலுக்கான நேர வரையறைகள், வேறு விடையங்களின் பால் கவர்ச்சி என்பனவும் படைப்பாற்றலினைப் பாதிக்கும். அத்துடன் சில இலக்கியத்துறையில் முக்கியமாகக் காணப்படும் பிரதிமை (Image) பாதிப்படைதல் பற்றிய உணர்வும், அதாவது புதிய படைப்பு விமர்சனத்துக் குள்ளானதும் ஏற்கனவே பெற்ற பிரதிமை பாதிக்கப்பட்டு விடுமே என்ற பயப்பாடும், படைப்பாற்றலைப் பாதிக்கவே செய்கிறது.

ஒரு சமூகத்தின் உண்மையான வளர்ச்சி அச்சமூகத்திலிருக்கும் படைப்பாற்றலின் வெளிப்பாட்டிலேயே தங்கியுள்ளது. ஆகவே படைப்பாற்றலானது நுண்ணறிவுத் திறனுக்கு நிகராக இனங்காணப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் இதழ் தொடர்

# ஒரு சூரியனின் தமிழ் உலா

## (சுவாமி விபுலானந்தர்)

-சி. தனபாலசிங்கம்

உலகில் அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்ணியாவைத் தவிர வேறெங்குமில்லாத விந்தை நிகழ்ச்சி மட்டக்களப்பில் உண்டு. நீருக்கு அடியில் இன்னிசை ஒலிப்பது. மட்டக்களப்பு வாவியில் இது நடைபெறுகிறது. இதனால் மட்டக்களப்புக்கு மீன்பாடும் தேன் நாடு என்னும் பெயர் வந்தது. விபுலானந்த அடிளார் பண்டைத் தமிழர் இசைப் புலமை பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார். திருஞானசம்பந்தர் பாடியதிருப்பதிகங்களை திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் யாழ்கொண்டு இசைத்தார். அது சகோட யாழ், அதை மீண்டும் உருவாக்கி இசைத்து இசைத் தமிழை வளர்க்க வேண்டும் என்று சுவாமி விபுலானந்தர் விரும்பினார்.

இசைத்தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது அங்கிருந்த இசைத் தமிழ் அறிஞர்களுடன் கூடி ஆராய்ச்சியும் நிகழ்த்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் ''பழந்தமிழர் இசையும் பிற நுண்கலைகளும்'' என்னும் பொருளில் 6 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ''இசை அலங்கார சரித்திரம்'' என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்பு ''பண்டைத் தமிழரின் இசைக் கருவிகள்'' என்னும் பொருள் பற்றி திருச்சி வானொலியில் இரு முறையும் சென்னைப் பல்கலைக் கழகத்தில்ஒரு முறையும் சொற் பொழி வாற்றினார். மதுரைத் தமிழ் சங்கம் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் ஆகிய இடங்களிலும் விபுலானந்த அடிகளார் தமிழிசை பற்றி சொற்பொழிவாற்றினார்.

கரந்தை தமிழ்சங்க வெளியீடாகிய 'தமிழ்பொழியில்' அடிகளார் பண்ணும் திறமும், குழலும் யாழும் எண்ணும் இசையும், பாலைத்திரிபு, சுருதிவீணை என்பவை பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். மதுரை தமிழ் சங்க வெளியீடாகிய ''செந்தமிழ்'' என்னும் மாதவெளியீட்டில் சங்கீத மகரந்தம், இசைக் கிரமம், எண்ணலளவை என்பவை பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார்.

இவ்விதமாக விபுலானந்த அடிகள் பதினான்கு ஆண்டுகள் இசைத்தமிழ் பற்றி ஆராய்ச்சி செய்து எழுதிய நூலே ''யாழ் நூல்'' இது தஞ்சாவூரிலுள்ள கரந்தை தமிழ் சங்க ஆதரவில் திருக்கொள்ளம்பூதூர்தி திருக்கோவிலில் ஆளுடைய பிள்ளையார் திருவுருவத்தின் திருமுன்னிலையில் 1947ம் ஆண்டு ஆனிமாதத்தில் இரண்டு நாட்கள் வரை அரங்கேற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு கல்வி அமைச்சர் அவிநாசலிங்கம் செட்டியார் பேராசிரியர் ரா. பி. சேதுபிள்ளை, உட்பட பலர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

யாழ்நூலை அரங்கேற்றியபின் 1947ம் ஆண்டு யூன்மாதம் 30ம் திகதி சுவாமிகள் கொழும்பு திரும்பினார். அப்பொழுது அவர் உடல் சோர்வாக இருந்தார். ஆனால் உள்ளம் சோர்வடைய வில்லை. யாழ் நூலை ஆங்கிலத்தில் வெளியிடவேண்டும் என்னும் ஆவல் கொண்டிருந்தார். ஆனால் அவர் உடல் ஒன்றுக்கும் இடம் தர வில்லை. நோய் முற்றியதனால் அடிகளார் கொழும்பில் ஒரு மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார். நோய் குணமடையாமல் 1947ம் ஆண்டு யூலை மாதம் 19ம் நாள் சுவாமி விபுலாநந்தர் இறைவனடி சேர்ந்தார். இரண்டு நாட்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அவரது உடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மூன்றாம் நாள் மீன்பாடும் தேன் நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கல்லடியில் உள்ள சிவானந்த வித்தியாலய வளவிலுள்ள ஆலமரத்தின் கீழ் சமாதி வைக்கப்பட்டார். இசைத் தமிழுக்கு அழிவே இல்லை. இதனால் விபுலானந்த அடிகளும் மக்கள் மண்ணுலகில் உள்ளவரை நினைவு கூரப்படுவார்.

(முற்றும்)

# நமது உடல் சில உண்மைகள்

மனித உடல் 65 விதம் தண்ணீராலானது. மூளை, மண்ணீரல், தண்டுவடம் இவற்றில் 75 சதம் தண்ணீர். ரத்தத்தில் 80 சதம் தண்ணீர். கண்ணில் உள்ள 'பின்விழி ரசம்' என்ற திரவத்தில் 99 சதம் தண்ணீர். ஒரு மனிதனின் நுரையூரலைப் பாய்போல் விரித்தால் அது 156 சதுர கஜம் பரப்பளவு உள்ளதாக இருக்கும். அதில் 500 மனிதர் தராளமாக இருக்கலாம். 60 வயதுடைய ஒரு மனிதன் தன் வாழ்நாளில் தொன்நூற்றாறு லட்சம் கன அடி காற்றை தன் நுரையீரல்களுக்குள் செலுத்தியிருப்பான்.

மனித உடலில் உள்ள சிரைகளையும், தமனிகளையும் இணைத்தால் மொத்த நீளம் 3,50,000 மைல் இருக்கும். இது பூமியை 14 முறை சுற்றிவர ஆகும் தூரத்துக்குச் சமம். பிறந்த குழந்தையின் நாடி ஒரு நிமிட்த்திற்கு 135 தடவை துடிக்கிறது. ஒரு வயதாகும்போது 111 தடவையும், 6 வயதில் 96 தடவையும், 16 வயதில் 80 தடவையும், நடுத்தர வயதில் 72 தடவையும், 50 வயதுக்குப் பிறகு 60 தடவையும் துடிக்கிறது. புகைபிடிப்பவர்களின் நாடி புகைபிடிக்காதவர்களின் நாடியை விட ஒரு நிமிடத்துக்கு 10 தடவை அதிகமாக துடிக்கிறது. நெப்போலியனின் நாடி ஒரு நிமிடத்துக்கு 40 தடவைதான் துடித்தாம்.

10 வயதான குழந்தைக்கு ஒரு சிறு காயம் பட்டால் அது குணமாக 6 நாட்கள் ஆகும். அதேகாயம் குணமாக 20 வயதான மனிதனுக்கு 10 நாட்களும், 30 வயதான மனிதனுக்கு 13 நாட்களும், 40 வயதான மனிதனுக்கு 18 நாட்களும், 60 வயதான மனிதனுக்கு 32 நாட்களும் பிடிக்கும்.

மனித உடலில் உற்பத்தியாகும் வெப்பம் தொடர்ச்சியாக வெளியேற்றப் பெறாவிட்டால், அதன் உஷ்ணநிலை ஒரு நாளில் 98.4 டிகிரி பாரன்கயிட்டுக்குப் பதிலாக 185 டிகிரி பாரன்கிற்றாக ஏறிவிடும். மனித உடலிலேயே மூக்கின் நுனிதான் மிகவும் குளிர்ச்சியான பாகம். இதன் உஷ்ணநிலை 70 டிகிரி பாரன்கயிற்.

சாதாரணமாக ஒரு மனிதனால் 84 மணி நேரந்தான் தூங்காமல் இருக்கமுடியும். 8 மணிநேரத்தில் தூக்கத்தில் ஒரு மனிதன் குறைந்த பட்சம் 40 தடவையாவது தன் நிலையை மாற்றிக்கொள்வான்.

மணிக்கு 200 மைல் வேகத்தில் நகரும் பொருள்களை மனிதனால் 100 கஜதூரத்திற்கு அப்பால் இருந்துதான் காணமுடியும். இதற்குக் காரணம் பார்வை நிலைப்பு என்ற விஞ்ஞான உண்மைதான். சினிமா சாத்தியமானதற்கும் இதுவே காரணம். மனிதன் கண் இமைப்பதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் ஒரு செக்கண்டில் பதினாறில் ஒரு பங்கு. இதுதான் மனிதனால் மிகத் துரிதமாக செய்யப்பெறும் வேலை.

தொகுப்பு. - க. கனகராசா.

ஆக்கம்;— "மஞ்சரி"

## என் பிரிய எதிர்பார்ப்பே!

கே அறிவுமதி

அடீ!
'கண்தாசன்'
இதழை
அலங்கரிக்கிற
'அமுதோன்' ஓவியங்களாய்

என் வாழ்வை
அலங்கரிக்க
நீ...வா!

உனது
வரவிற்குப்பின்பே
எனது வீதியில்
வசந்தத் தேருக்காய்
பாதையைச்
செப்பனிடுவேன்

ஆமாம்
உனது
சந்திப்பிற்குப் பின்பே

நான்
பௌர்ணமிக்குப்
படையல்
நடத்தப்போகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை

இதழ்

நமது குடும்பத்தின்

வழிகாட்டி

**வளர்க அதன் பணி**

# VEMAAL. Co. (Pvt) Ltd

**Dealers in**
**Coconut oil, Poonac, Sugar & Tea Etc**

***Telephone*:- 431641** ***Fax*: 433781**

**No: 1, DAM STREET**
**COLOMBO-12**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி! உன்னைத்தான்

நாளைய வரலாற்றின் நாயகனாக விளங்கவேண்டிய தம்பி உன்னைத் தான். வாழ்க்கை சிறப்புற்று அன்பும், அறமும் அரசோச்ச வேண்டிய நமது சமுதாயத்தில் துன்பமும், கொடுமையும் கொடி கட்டிப்பறப்பதன் ஏது என்ன என்று சற்றே சிந்தித்துப்பார்.

நமது முன்னோர் கடந்து வந்த பாதையில் காணப்படும் சுவடுகளில் நமது பெருமைக்குரியவை எவை, சிறுமைக்குரியவை எவை என்பதைச் சற்றே சீர்தூக்கிப்பார்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த குடியினர் என்று மார்தட்டும் நீயும் நானும் இன்று திக்குத் திசை தெரியாது அலையுண்டு அவதியுற்றுக் கிடப்பதனை கவனத்திற் கொள்.

கடந்து வந்த காலம் எப்படியானது என்பதைச் சிந்தித்துப்பார். ஒற்றுமையின்மையால் உருக்குலைந்த சமுதாயத்தின் வாரிசுகள் நீயும், நானும் என்பதை மறந்துவிடாதே. தலைமைத்துவத்திற்காகத் தம்மிடையே போராடி ஒருவர் முடியை ஒருவர் உடைத்த முடியுடைய மூவேந்தராம் சேர, சோழ, பாண்டியர்கள் நமது முன்னோர் என்பதை மறந்து விடாதே.

மூவேந்தரும் ஒற்றுமையாய் இருந்திருந்தால் தரணியிலே இன்று நமது நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை ஆராய்ந்து பார்.

இனமும், மொழியும், நாடும், மதமும் நலம்பெற வேண்டும் என்ற தூய சிந்தனையிலா அவர்கள் தம்முள் பொருதினார்கள். சுயநலமும், மண்ணாசையும் பெண்ணாசையும், பொன்னாசையும் கொண்டல்லவா அவர்கள் பொருதி இனத்திற்கு நீங்காப் பழியையும், சுமையையும் விட்டுச் சென்றுள்ளனர். அவர் வழி வந்த நீயும், நானும் படும் அவலங்களுக்கு அவர்களது போட்டி பொறாமைகளும் குறிப்பிடத்தக்க ஏதுக்கள் என்பதை மறக்க முடியுமா? தம்பி ஒன்றே குலம் என்ற தாரக மந்திரத்தை மேடைகளிலே முழங்கிக் கொண்டு குலநாசம் செய்த நமது முன்னோர்களில் சிலர் கைக்கொண்ட தவறான வழியை இனியும் நாம் பின்பற்றலாமா?

தம்பி, காலம் மாறுகின்றது. உலகத்தில் பல மொழிகள், பல மதங்கள் நிலை பெற்றுள்ளன. இன்றைய நிலையில் நம் முன்னோர் தமக்குள்ளேபொருதி அழிந்ததைப்போன்று நாமும் தொடர்ந்து செயற்பட்டால் உலக அங்கத்திலே நமது நிலையென்ன?

நாளைய பொழுதின் நாயகனே, நாட்டில் இனத்தின் தலைவனாக நீயோ நானோ இல்லாதுவிட்டாலும் நல்லதோர் குடும்பத்தின் தலைவனாக, வழிகாட்டியாக, நம்மை நாமே உயர்த்திக்கொள்வோம் முதியோரைக் கனம் பண்ணி, நம்மை நம்பியுள்ள பெற்றோரையும், உடன் பிறந்தாரையும், உற்றாரையும், சுற்றத்தாரையும் அன்பும், அறமும், பண்பும் பணிவும், துணிவும், நிம்மதியும் நிறைந்த வாழ்க்கைக்கு இட்டுச் செல்லத் திடம் கொண்டு செயற்படுவோம்.

தம்பி நாளைய பொழுது நல்ல பொழுதாக மலர்வதற்கு நம் சிந்தனையைச் சீரமைத்து செயற்படதாமதியாது இயங்கிடுவோம். இனியுமேன் அச்சம்,

- அண்ணன் த. மனோகரன்

தீமைகளைத் தூரவிலக்கி தூய சிந்தனைகளின் வழிகாட்டலுடன் நல்லதைச் செய்து நம்மவர் நன்னிலை பெற புது வழி தொடர்வோம்.

அஞ்சாதே தம்பி அஞ்சாதே. அடக்கம், அன்பு, அறம், உண்மை, நேர்மை, பணிவு, துணிவு, பக்தி பண்பு ஆகிய ஆயுதங்களை நாம் ஏந்தினால் உன்னையும் என்னையும் வாட்டும் துன்பங்கள் யாவும் தூரவிலகி ஓடிவிடும்.

ஒற்றுமைக்காக உழைத்து உயர்வடைய வழிகாண்போம். ஒற்றுமையே வாழ்க்கையின் உயிர்நாடி என்பதை உணர்ந்து வாழ்க்கை வெற்றிபெற இந்த வையகத்தில் நாம் நல்லபடியாக வாழ வழியமைத்துக் கொள்வோம்.

தம்பி, நமது வாழ்க்கையின் செயற்பாடுகள் நல்லோர் போற்ற ஏற்றதாயமைய சீரிய வழியில் சிந்தையைச் செலுத்தி சிறப்புற வாழ வழி காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சினிமா ஒரு பார்வை

ரி. சௌந்தர் (டென்மார்க்)

சினிமா என்னும் ஊடகம் சக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச் சாதனமாக நிலைத்துள்ளது. ஐயம் இல்லை. அது பொழுது போக்குச் சாதனமாகவும் பயன்படுகின்றது. ஓவியம். சிற்பம் போன்ற கலைகளுக்கில்லாத ஒரு சிறப்பும் சினிமாவுக்கு வாய்த்துள்ளது. ஓவியமும் சிற்பமும் ஒரு கலைஞனின் தனித்துவ சிருஷ்டி ஆற்றலையும் நோக்கையும் உள்ளடக்கிய வெளிப்பாடாகும், எனவே கலைஞனின் தனித்துவம் அழுத்தம் பெறும். ஓர் ஓவியக் கலைஞன் சொல்ல வரும் சங்கதியை ரஸிகன் முழுமையாக உள்வாங்கிக் கொள்வான் என்பதற்கான உத்தரவாதமும் இல்லை. சினியா அப்படியல்ல. அங்கு பல கலைஞர்களுடைய ஆற்றல்கள் ஒரு சங்கதியை நேர்த்தியாகச் சொல்வதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஒத்திசைவும் நிகழ்த்தப் படுகிறது. அசைவுண்டு. பேச்சு உண்டு இசை உண்டு. காலம், களம், பாத்திரங்கள் ஆகியவற்றை அழுத்தவல்ல உத்திகளும் உள. இவற்றினாலும் சினிமா செப்பமான கலைவடிவமாக மட்டும் அல்லாமல், பலதரப்பட்ட மக்களுடைய ரஸனையையும் ஈர்க்க வல்லதாகவும் உயர்ந்துள்ளது.

இந்தியாவிலிருந்து பல்லாயிரக் கணக்கான சினிமாப் படங்கள் வெளிவந்துவிட்டன. இவற்றுள் நல்லன என்று எத்தனை தேறும்? எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலே தமிழ் சினிமாவின் பங்களிப்புச் சோடை போனதல்ல. தமிழ்த் திரைப் படத்துக்கு ஐம்பது தாண்டிய வயதும்! வெளிநாடுகளிலே வாழும் தமிழர்கள் தமிழ் சினிமாவைப் பிரதான பொழுது போக்குச் சாதனமாக மட்டுமல்லாமல். தூரங்களினால் அறுந்து பட்டிருக்கும் கலாசார உறவு சாதனமாகவும் நாடும் பரிதாபமும் விடிந்துள்ளது. இதனாலும், தமிழ் சினிமாவை மீள்பார்வை செய்யும் ஓர் அக்கறை எனக்கு ஏற்படுகின்றது.

ஆரம்ப கால இந்திய சினிமா இந்திய மேடை நாடகங்களின்பதிப்பாக அமைந்தது. அந்த அளவுக்கு நாடகப் பாதிப்பு கோலோச்சியது. சினிமா வந்த காலத்திலே பம்பாய்பார்சிகளாலே உருவாக்கப்பட்டிருந்த மேடை நாடகப் பாங்கம் செல்வாக்குப் பெற்றிருந்தது. பார்சி நாடகக்காரர்கள் ஆங்கிலேயர்களாலே அறிமுகப்படுத்தப்பட்ட மேடை உத்திகளை உள்வாங்கி, தமது நாடகங்களிலே புகுத்தினர். மேடை நாடகங்களிலே தேவையான கதைகளை இந்திய இதிகாச மரபிலே மலிந்து கிடந்த அநேக கதைகளிலிருந்து பொறுக்கி எடுத்தனர். அக்கால ரஸனையை ஒட்டி இசையும் பாடலும் இந்நாடகங்களிலே சிறப்பிடம் பெறலாயின. இந்த மேடை நாடகங்கள் இந்திய நாடக மரபு சார்ந்தன வல்ல. அவற்றின் பரிணாம வளர்ச்சியாகத் தோன்றியவையுமல்ல. இருப்பினும், இவை வர்த்தக ரீதியான வெற்றியைப் பெற்றன. பம்பாயில் 1852 ஆம் ஆண்டில் மேடையேறிய 'ஹரிசத்திரா' பெற்ற வெற்றி இதற்கு உதாரணம். கலையின் வெற்றியைப் பண வசூலை அளவுகோலாகச் கொண்டு கணக்கிடும் வியாதி அப்பொழுதே தொற்றிக் கொண்டது எனலாம். இந்திய நாடக் மரபினைக் கைவிட்டு. எவ்வித சிருஷ்டி பிரக்ஞையுமின்றி. லாபம் ஒன்றைக்குறிக்கோளாகக் கொண்டு பம்பாய்க்காரர் செய்த கலப்பட வியாபாரம் 'இந்தியப் பணி' என்று கூறும் அளவுக்கு உச்சம் பெற்றமை அவப்பேராகும். இருப்பினும். அதுவே இன்றளவும் சராசரியான இந்தியக் கலைஞருடைய இலட்சிய தர்சனமாக அமைந்துள்ள நோய்க்கான மூலத்தையுஞ் சுட்டுகின்றது.

இத்தகைய ஒரு போலியான கலைப்பின்னணியிலேயே ஆரம்ப காலத் தமிழ் சினிமா பிறத்தது இதனால் பாடக்டிகூயளர்களே நடிகர்களாக வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிட்டப்பா, செல்லப்பா. தியாகராஜபாகவதர். பி. யு. சின்னப்பா! கொத்தமங்கலம் சீனு. ஹொன்னப்ப பாகவதர், தண்டபாணிதேசிகர், பி. எஸ். கோவிந்தன், டீ. ஆர். மகாலிங்கம் போன்ற பாடகர்கள் ஆரம்ப கால தமிழ் சினிமாவிலேகதாநாயகர்களாகத் தலைநிமிர்ந்து பவனி வந்தார்கள், செல்லப்பர் தமிழறியும் பெருமாளாகவும், எம். ஜீ. ஆர். விறகுத் தலையனாகவும் நடிப்பதை அக்காலத் தமிழ் சினிமா ரசிகர்கள் விசிலடித்து வரவேற்கிறார்கள் பின்னணிப் பாடகர்களின் குரல்களின் பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டு களை 'டப்பிங்' செய்யும் முறையை ஏ. வி. மெய் யப்பன் செட்டியார் வர்த்தகரீதியாக வெற்றிபெறச் செய்தார். ஏவிஎம்மின் இச்சாதனையாலேதான் எம். ஜீ. ஆர் கதாநாயகனாகவும், அந்த இமேஜி னால் தமிழ் நாட்டின் அரசியல் தலைவராகவும் உயர்ந்தார் என்கிற உண்மை இன்றைய தலைமு றையினர் வசதியாக மறந்துவிட்டார்கள்.

எம். ஜீ. ஆரின் உயர்வுக்கு இன்னொரு விபத் தும் உதவியது என்பதையும் நாம் மறக்கலாகாது அதுதான் மூச்சு விடாமல் தம்பிடித்து வீர வசனம் பேசும் பாணி! அடுக்கு வசனங்களுக்கு முக்கியத்து வங் கொடுக்கும் சினிமாப் பாணிக்குக் கை கொடுக்க ஆரம்பத்தில் ஜுபிட்டர் பில்ம் ஸாரும் முன் வந்தா ர்கள். 'இளங்கோ' கண்ணகியிலும்' மஹாமாயாவி லும் வசன வீச்சுக்கு ஒரு சினிமா வடிவம் கொடுத் தார். பாரதிதாசன் 'வளையாபதி' 'பொன்முடி' ஆகிய படங்களிலும், அண்ணாதுரை 'வேலைக்காரி? 'முதல் இரவு' ஆகிய படங்களிலும் இந்த அடுக்கு மொழிகளுக்கு திராவிடக் கழகச் சாயம் பூசினார் கள். அந்தக் காலத்தில் கருணாநிதியும், கண்ணதா சனும் சேலத்திலும், கோவையிலும் அமைந்த சினி மாப் பட்டறைகளிலே தொழில் பயின்றுகொண்டி ருந்தார்கள். கருணாநிதி எதையும் சீக்கிரம் கற்றுக் கொள்ள வல்லவர். இந்த வல்லமையை அவர் சிவா ஜியின் சினிமா நுழைவுக்குப் பூபாளமாகத் திகழ்ந்த பராசக்தியிலே நாட்டினார். 'ஓடினான் ஓடினான்...' என்றும், 'பார்ப்பானை அடித்தேன். கோயில் கூடாது உன்பதற்காக அல்ல. கோயில் கொடியவர் களின் கூடாரமாகக் கூடாது என்பதற்காக' ஆகிய வசன விசனங்கள் இன்றும் நினைவுக்கு வருகின்றன. வசனச்சித்து விளையாட்டுகளைக் கருணாநிதி 'மனோ கரா'வில் ஒரு நுண்கலை போன்று பம்மாத்துக் காட்டிப் பிரமிக்க வைத்தார். கருணாநிதியின் சினிமா வசன வெற்றியைக் கண்டு, அண்ணாதுரை சினிமா விலிருந்து வெற்றிகரமாக வாபஸ் வாங்கி னார் என்று நினைக்கவும் இடமுண்டு. அண்ணா வின் ரங்கோன் ராதைக்குக் கருணாநிதியே வசனம் எழுத வேண்டிய பரிதாபம். மக்களின் நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாத இதிகாசக் கதைகளை ரஸி த்த மக்களுக்கு, 'ஒன்றே குலம். ஒருவனே தேவன்' என்று ஏதேதோ புதிதுகளைச் சொல்வதாகப் பாவ னை செய்வதற்கு அடுக்கு வசனங்களை தி.மு.க. வினர் ஆளுவதற்குக் கருணாநிதி ஆசானாய் உயர் ந்தார். 'இல்லாத ஒரு திராவிடநாட்டை மீட்கப் போவதாக' இவர்கள் வீர வசனங்கள் பேசினார்கள். சினிமாக் கவர்ச்சியை அரசியல் ஆதாயம் பெறக்கூடிய கருவியாகப் பயன்படுத்தலாம் என்பதை 'அறிஞர்' அண்ணாதுரை விண்டு காட்டிட, 'கலைஞர்' கரு ணாநிதி வசனமாகவும் கவிஞர் கண்ணதாசன் பாட லாகவும் உருக்கொடுக்க. 'புரட்சி நடிக'ராக எம்ஜி ஆரும் 'சிம்மக் குரலோ'னாக சிவாஜியும் நிமிர்ந்தார் கள், அன்று தமிழ் சினிமா வைப் பிடித்த இந்த வியாதி, இன்றளவும் தமிழ் நாட்டின் அரசியலைப் பிடித்த வியாதியாகவும் நிலைத்துள்ளது. இதற்காக அவர்களைக் குறை கூறுவதாக; அல்லது அக்கூற்று களை அற்புத அரசியற் சித்தாந்தங்களாக மருண்டு கூத்தாடும் 'தொண்டர்' கூட்டத்தைக் குறை கூறு வதா என்கிற ஆராய்வு இக்கட்டுரையின் Scope ற்கு அப்பாற்பட்டது!

தமிழ்ச் சினிமாவில் சிவாஜியின் வருகை ஒரு திருப்புமுனையாகும் என்று விஷயம் அறிந்தவர்களும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். என்னைப் பொறுத்த வரை, சிவாஜி சினிமா ஊடாகத்தினை உரிய முறை ப்படி புரிந்து நடித்ததாகத் தோன்றவில்லை. சினி மாவில் கமராவின் பங்கு மிக முக்கியமானது நாடக உத்திகள் அதற்குப் பொருந்தாது. ஒரு கண்ணின் நுட்பமான அசைவினைக் கூடச் சினிமாவிலே துல் லியமாகக் காட்டி விட முடியும். சிவாஜியின் அங்க அசைவுகள், நடை, அபினயம் அனைத்தும் அடங்கிய பணி Original ஆகவே நாடகபாணி Over acting நாடக பாணி இந்தப் பாணியை கமரா மூலம் பார்க்கும் பொழுது அலுப்புத் தட்டிச் சுவையற்றதாகி விடுகி றது. பின்னர் வந்த கமலஹசன், பிரதாப் போன்றோ ருக்கு இருந்த சினிமா பிரஞைகூட சிவாஜிக்கோ, அவ ரை உருவாக்கிய திமுகாவுக்கோ இருந்ததில்லை (அ: தி. மு. க என்று பிரித்துப் பேசத் தேவையில்லை 'இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள், என்பது காமராஜரின் பொய்யாமொழியாகும்.

தமிழ்ப் படங்களைப் பிற மொழி படங்களின் தரத்திற்கு எடுக்க வேண்டும் என்கின்ற பிரக்ஞை சிலரு க்கு இருந்திருக்கின்றது. ஜெயகாந்தன், ஜெயபாரதி' பாலு மகேந்திரா ஆகியோர் இந்தப் பிரக்ஞையாள ருள் ஒரு சிலரே 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'தண்ணீர் தண்ணீர்', 'கண்சிவந்தால் மண் சிவக்கும்', 'ஏழாவது மனிதன்', 'வீடு' ஆகியன சாதனைகள ல்ல சரியான திசையிலே நடத்தப் பட்ட பரிசோத னைகள் என்று நினைத்துச் சந்தோசப்படலாம். By the way, இந்தப் படங்களுக்குப் பின்னாலே சத் தியமாய் நின்ற கலைஞர்களுடைய Commercial add ress ஸுகள் உங்களுக்குத் தெரியுமா ?

நான்கைந்து சண்டைக் காட்சிகள், இரண்டு 'குறாப்' நடனம் (கபரே என்றால் better), நிறைய மை பூசிய பெண்கள், ஒரு குளியல் காட்சி (உடலோடு நனைந்த உடை தெரிதல் better), ஓடிப் பிடித்து விளையாடும் காதலர்கள், ஒரு 'வித்தியாசமான' (பேட்டிகளிலாவது) உச்சக் கட்டம்! இவற்றைக் கல ந்த ஒரு சாம்பார்தான் தமிழ் சினிமா. எதார்த்த மான எழிலோ, ஆழமான கதையம் சமோ, மன தைத் தொடும் பாத்திரமோ கிடையாது. இவற்றை எல்லாம் தமிழர்கள் ரஸிக்க மாட்டார்களென்பது தமிழ்ச் சினிமா பிரமாக்களின் திடமான நம்பிக்கை! மாங்காய் புளித்ததோ ? வாய் புளித்ததோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையின் எத்தனையோ துறைகளிலே வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. சாதனைகள் பெருகுகின்றன. பிற மொழிகளில் சினிமாவும் புதியன சாதித்துள்ளன. எம். ஜி. ஆர். - சிவாஜி - ஜெமினிகாலத்திலிருந்தே, கடந்த முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகளாக, தமிழ் சினிமாவிலே காதலிகளை ஓட விட்டுக் காதலர்கள் துரத்திப் பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள்! இந்த ஓடிப் பிடிக்கும் விளையாட்டிலே எப்பொழுதுதான் சலிப்பு ஏற்படப் போகின்றதோ? நாற்பது வருடங்களுக்கு முந்தி வந்த ஆங்கிலப் படங்களைத்தான் இன்றும் தமிழ்படங்கள் 'காப்பி' யடிக்கின்றன. படத்திலே தோன்றும் ஒரு பாத்திரம் வில்லனா, கதாநாயகனா என்பதை முதற்காட்சியிலே நாம் உணர்ந்து கொள்ளலாம். 'மக்களே போல்வர் கயவர்' என்றார் வள்ளுவர். இதைச் சொன்னால், 'வள்ளுவருக்கு என்ன தெரியும்?' என்று நமது தமிழ்ச் சினிமாக்காரர் நமக்கு lecture அடித்துக் கழுத்தறுத்து விடுவார்கள். ஆளை விட்டால் போதும்!

ஆங்கில சினிமாக்காரர்களுக்கு உள்ள மூலதன வசதிகள் தமக்கில்லை என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. மதுரையில் அற்ப ஆயுளிலே மரணித்த தமிழ் ஸ்டுடியோ ஒன்றிலே பதியம் போடப்பட்டது தான் சிங்கள சினிமா. சிலகாலம் தமிழ் சினிமாவை மொழிமாற்றம் செய்தே அது நடைபயின்றது. இன்று, சர்வதேசரீதியில் சிங்கள சினிமா பரிசுகள் பெற்று, தரத்திலும் முன்னணியில். நிற்கின்றது. இன்றும் சிங்கள சினிமா ஒரு தமிழ்ச் சினிமா நடிகர் பெறும் ஊதியத்தினை மட்டுமே, படத்தின் முழு 'பட்ஜட்'டாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது.

மேலை நாடுகளில் இந்திய சினிமா என்றால் சத்யஜித்ரே, மிருணாள்சென் போன்றவர்களையே நினைத்துக் கொள்ளுகிறார்கள். சிவாஜியோ, கமலோ பாலசந்தரோ, பாரதிராஜாவோ, மணிரத்தினமோ அவர்களுக்குத் தெரியாத பெயர்கள். ரேயும் சென்னும் வங்கம் தந்த கலைக்கொடைகள் என்பது அவர்களுக்குத் தெரியும். வங்கம் காட்டிய வழியில் மலையாளப் படங்களும், கன்னடப் படங்களும் சர்வதேச அரங்கில் தலைநிமிர்த்தத் துவங்கியுள்ளன. மலையாள படடைரக்டரான அடூர் கோபாலகிருஷ்ணனின் சர்வதேச அங்கீகாரம் சிறப்பானது. அவருடைய 'எலிபதாயம்' வெற்றி நாட்டியது. இந்தப் படம் நிலவுடமைச் சமுதாயத்தின் அந்தத்தை விசாரணை செய்கின்றது. இவரது படங்கள் தியான நிலைப்படங்கள் (CONTEMPLATIVE); சிந்தனையில் ஆழ்த்துபவை. வங்கத்து முன்னோடிகளைப் போலவே, மலையாளக் கலைப் படங்களும் பிரதேச மக்களுடைய வாழ்க்கையையும் கலையையும் ஏனைய மரபுச் செழுமைகளையும் சிதைக்காமற் பிரதி பலிக்கின்றன. ஆனாலும், தமிழர்களோ 'வெற்றிப் படங்கள்' தயாரிப்பதாகச் சுய தம்பட்டம் அடித்துக் கொள்ள வெட்கப்படுவதில்லை. இந்த வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு டி. ராஜேந்தர். கனடாவிலிருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்று 'கள்ளி உனக்கேனடி உள்ளி' என்று நக்கலடிக்கும் அளவுக்கு அவர் பெயர் நாறுகின்றது. தமிழ் சினிமாவின் வெற்றி FORMULA வை ரஸிகர்கள் எவ்வளவு தூரம் ஏற்றுள்ளனர் என்பதை வீடியோவில் படம் பார்க்கும் பொழுது துல்லியமாக அறியலாம். தமிழ்ப் படம் துவங்கி 10 நிமிடங்களுள் ஒரு காதல்பாட்டு துவங்கும். உடனே 'அதை ஓடவிடு' என்று ரஸிகர்கள் ஆணையிடுவார்கள். காதற்காட்சிகள் மட்டுமல்ல, சண்டைக் காட்சிகளும் டான்ஸ் காட்சிகளுக்கும் (குயிலிகளும் சாந்திகளும் ஒரு கச்சையுடன் ஆடினாலும்) இந்த 'ஓடவிடும்' மரியாதை கிடைக்கும்! இதில் வேடிக்கை என்னவென்றால், 'ஓட விடும்' சக்கைகள் படங்களை தியேட்டர்களிலே ஓட்டுவதற்கான 'ஊக்கிகள்' என்று தமிழ் சினிமாக்காரர் இன்றளவும் சக்தியமாகவே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்!

அண்மை காலத்தில் தமிழ்த் திரையுலகில் மிகவும் பிரபல்யமாக அடிபடும் பெயர் மணிரத்தினம். இவருடைய 'நாயகன்' படத்தைப் பற்றிக் பெருமையடித்துக் கொண்டார்கள். OSCAR AWARD ற்கான படம் என்று கூடக் கூத்தாடினார்கள். நாயகனுக்கும் 'ஒஸ்கர் அவாட்'டுக்கும் முடிச்சுப் போடுவதே தமிழ் சினிமாக்காரரின் அறியாமையை வெளிச்சமிட்டுக்காட்ட உதவும்! MARLON BRANDO நடித்த GOD FATHER படத்தின் ஒரு தமிழ்க் காப்பியே நாயகன். அசல் காப்பியல்ல என்று காட்டுவதற்காக; 1982 இல் வெளியான ONCE UPON A TIME என்ற படத்திலுள்ள சம்பவங்கள் சிலவற்றை உருவி நாயகனிலே சேர்த்தமையை மணிரத்தினத்தின் 'கலாமேதமை' என்று போற்றுவதா? கடத்தல் பொருளும், உப்பு மூட்டைச் சங்கதியையும் மட்டும் தான் திருடினார், என்றும் சொல்வதற்குமில்லை. GOD FATHER வரிசையில் மூன்றாம் பாகமும் அண்மையில் வெளிவந்து விட்டது. அந்த GOD FATHER ரில் அராஜகங்களையும், அக்கிரமங்களையும் சித்திரிக்கப்படுகின்றன. அவன் கொடியவனே, கொடியவனின் கதை. அவ்வளவுதான். ஆனால், நாயகனில் அப்பாத்திரம் மக்களுக்காகப் புரட்சி செய்வதாகக்கதை பண்ணியிருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் 'நாயகன்' கமலுக்கு மார்லன் பிரண்டோ போலவே மேக்கப். கமல் பல இடங்களிலே மார்லன் பிராண்டோ பாணியை பின்பற்றி தனது இயல்பைக் கோட்டை விட்டதாகவும் எனக்குத் தோன்றுகின்றது.

கலைஞர் பலருடைய கூட்டு முயற்சியாகவே சினிமா உருவாக்கப்படுகின்றது. இவற்றின் இணைப்புக்கும், ஒத்திசைவுகளுக்கும் இயக்குநரே தளகர்த்தன்; தத்துவக்காரன். ஆனால், தமிழ் சினிமாவில் இயக்குநர்கள் செல்வாக்குள்ள ஒரு நடிகருக்கோ இசையமைப்பாளருக்கோ எடுபிடிசளாக மாறியிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது மகா கேவலமாகும். ஒரு இசையமைப்பாளரைச் சூரியனாக உருவகப்படுத்தி ஒரு சினிமாவுக்கு விளம்பரஞ் செய்யும் 'சாதனை' தமிழிலே தவிர உலகத்தில் எங்கும் நிகழ்ந்ததில்லை. இவற்றை விஸ்தாரமாகச் செய்வதற்கு, தமிழ் இனத்தின் சீரழிவுக்குத் தமிழ் சினிமாவும் ஒரு BAROMETER ஆக மாறியிருப்பதுதான் காரணம். பணத்திற்காக எதையும் செய்யத் தயாராகஇருக்கும், சமூகப் பிரக்ஞை கிஞ்சித்தும் இல்லாத வக்கிர புத்திக்காரர்களே தமிழ் சினிமாவைக் குத்தகை எடுத்து விட்டார்களா? சமுதாயத்தைத் தமது பணத்தாசையினால் எவ்வாறு இவர்கள் சீரழிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவல்ல சத்திய கலைஞர்கள் தமிழர் மத்தியில் இல்லையா? சினிமாவுக்குக் கதை என்றதும் உச்சக்கட்டம் என்ன? என்பது தான் கேள்வி. எந்த நடிகனை போடுவது என்றதும், 'அவருக்கு 'மார்க்கட்' எப்படி இருக்கிறது' என்பதுதான் கேள்வி. நடிகை என்றதும் 'அவளுடைய மார்பளவு என்ன?' திறமைகளோ, பாத்திரப் பொருத்தமோ தேவையில்லை.

தமிழில் அத்தி பூத்தாப்போல நல்ல நாவல்களும் வந்திருக்கின்றன. அவற்றைப் பற்றித் தமிழ் சினிமாக்காரருக்கு அக்கறையில்லை. சத்யஜீத்ரே தாம் இயக்கிய 'பதர் பாஞ்சாலி' என்ற சினிமாவுக்கான கதையை BIBHUTI BANERJI யின் நாவலிலிருந்தே பெற்றார். இப்படம் 1956ஆம் ஆண்டு வெளிவந்தது அதே ஆண்டில் சர்வதேசப் பட விழாவில் ஆசியாக் கண்டத்தின் மிகச் சிறந்த படத்திற்கான பரிசைப் பெற்றது. 'பதர் பாஞ்சாலி' ஒரு வறிய பிராமணக் குடும்பத்தை பற்றிய கதையைச் சொல்லுகிறது. பாத்திரங்களுடைய வாழ்க்கை அற்புதமாகவும் எதார்த்தமாகவுஞ் சித்தரிக்கப்பட்டுள்ளது. கதையின் நாயகன் அப்பு, அவன் சகோதரி 'துர்க்கா பாட்டி ஆகிய பாத்திரங்கள் அப்படத்திலே நம் கண்முன்னால் வாழ்கிறார்கள். முதல் பாகத்திலே அப்பு சிறுவனாக உலவுகிறான். மற்றைய இரண்டு பாகங்களிலும் அப்பு இளைஞன்; வளர்ந்தவன். தந்தையும், சகோதரியும் இறந்த பின்பு அப்பு தாயுடன் வாழ்கின்றான் தாய்-மகன் பாசத்தை மிக நுணுக்கமாக, மனதைத் தொடும் வண்ணம், கலைநயத்துடன் படமாக்கியுள்ளார். இயற்பண்பியல் அந்தப் படைப்பிலே அழகு சேர்க்கிறது. ஆனால், மிருணாள் சென்னின் படங்கள் சமூகப் பிரக்ஞையுடன் அரசியற் பிரச்னைகளை அணுகின்றன. இவர் எழுபதுகளில் கல்கத்தாவில் நடைபெற்ற நக்ஸல்பாரி எழுச்சியை மையமாக வைத்தும் ஒரு படம் எடுத்துள்ளாராம். இப்படத்தினை பார்க்கும் வாய்ப்பு எனக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இவர்களை பார்க்கிலும் என்னை மிகவும் கவர்ந்த சினிமாக்காரர் ஜில்மாஸ் குன்னே (YILMAZ GUNNEY) என்பவராவர். இவர் துருக்கி நாட்டைச் சேர்ந்தவர். நடிகராக நுழைந்து, இயக்குநராய் மலர்ந்தவர். துருக்கியில் வாழும் 'குருடிஸ்' மொழி பேசும் இனத்தைச் சேர்ந்தவர். குருடிஸ் மொழி துருக்கியில் தடைசெய்யப்பட்டுள்ளது. குருடிஸ் மக்கள் ஈரான், ஈராக், சிரிய துருக்கி, ருஷ்யா ஆகிய ஐந்து நாடுகளில், பெரும்பாலும் எல்லைப் புறங்களிலே வாழ்கின்றார்கள். தங்களுடைய மொழிக்காகவும், சுதந்திரத்துக்காகவும், கௌரவத்திற்காகவும் நெடுங்காலமாகப் போராடுகின்றனர் ஆதிபத்திய போட்டிகளிலே அவர்களுடைய உரிமைகள் சூதாட்டக் காய்களாக்கப்பட்டன. இவர்களது போராட்டம் ஈராக், ஈரான் துருக்கி ஆகிய நாடுகளிலே முனைப்பும் பெற்றுள்ளது இவர்களுடைய விடுதலை எழுச்சிகள் கோரமான முறையில் ஒடுக்கப்பட்டு வருகின்றன. ஜில்மாஸ் குன்னேயின் படங்கள் இந்த எழுச்சிக்கு ஜீவன் ஏற்றும் வித்தைகளாகவும் அமைகின்றன. இவர் இயக்கிய 'வழி' (YOL) என்ற படம் 1983ஆம் ஆண்டில் சர்வதேச பட விழாவிவ் மிக சிறந்த படத்திற்கான 'தங்கச் சிலை'யை பரிசாக பெற்றது.

இப்படம் நான்கு கைதிகளைப்பற்றியது, நீண்ட சிறைவசத்தின் பின்னர் திரும்பும் கைதிகள் தங்கள் குடும்பங்களிலும், சமூகத்திலும் நடக்கும் அநீதிகளையும் கொடுமைகளையும் மனங் கலங்கி, அவற்றின் விமுத்திக்காகப் போராடுவதாகப் படம் அமைந்துள்ளது. இப்படத்தில் வரும் சம்பவங்கள் பல எண்பதுகளில் இலங்கை ராணுவத்தினர் யாழ்ப்பாணப் பகுதிகளிலே செய்த அட்டுழியங்களை நினைவு படுத்துகின்றன...நாய்கள்குரைப்பது திகில் ஊட்டவல்ல காட்சியாக எடுக்கப்பட்டுள்ளது. இவருடைய படங்கள் சமூகப் பிரச்சினைகளை மக்கள் மன்றத்திலே நிறுத்தின, இதன் கரணமாக, பல முறைகள் துருக்கிய அரசினாற் சிறையில் அடைக்கப்பட்டார். மார்க்ஸிஸ-லெனினிஸ-மாவோஎிஸ கோட்பாடுகளை ஏற்றுள்ள துருக்கிய கம்யூனிஸ்ட் ஆதரவாளர் என்ற வகையிலும் அவர் இன்னல்களுக்குள் ஆளானார். இந்த அடக்குமுறைகளிலிருந்து தப்பியோடி பிரான்ஸில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்தும் தமது பணியை ஊக்கமுடன் தொடர்ந்தார் துருக்கி அரசின் பாசிஸ வெறியாட்டத்தைத் தமது படங்கள் மூலம் உலக அரங்கிலே அம்பலப்படுத்தினார். குருடிஸ் மக்களுடைய இன்னல்கள், தவிப்புகள், தாகங்கள் ஆகியவற்றினைச் சித்திரிக்கும் பொழுதும்: உலகளாவிய மனித நேயத்தினைத் தமது படங்களிலே கலைத்துவம் பொருந்திய ஊடுபாவாகவும் பின்னிய கலை சித்தர்இவர்! இவர் இன்று உயிருடன் இல்லை. இது குருடிஸ் மக்களுக்கும், உலகப்புரட்சிகர இயக்கங்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுடைய விடுதலை இயக்கங்களுக்கும், உலக சினிமாக் கலைக்கும் பாரிய இழப்பாகும்.

சர்வதேச அரங்கிலே, சினிமாத் துறையிலே, முகிழ்ந்து வரும் புதிய கலைப் படைப்புகளைப் பார்க்கும் பொழுது, என் மனதினைத் தவிர்க்க இயலாத ஆசை ஒன்று அரிப்பதை உணர்கின்றேன். தமிழ் மன உணர்வும், மனித ரோஷமும், சத்தியகலா நேசிப்பும் உள்ள ஒரேயொரு கலைஞன்—தமிழ்க் கவிதைக்குப் புதிது செய்த பரதியைப் போன்ற ஒரு வெறியன்—தமிழ் சினிமா உலகில் தோன்றுவானா? எப்பொழுது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு சத்து
வழங்குவதே
எங்கள் சொத்து

வளர்க 'வாழ்க்கை'

# PETTAH ESSENCE SUPPLIERS

Suppliers To Conffctioners & Bakers
Smporters Of All Kinds Of Food Colours
Essences, Chemicals, Groceries Etc

18/1, DAM STREET
COLOMBO-12
SRI LANKA

*PHONE*: 26235, 449269, 434859 *TELEX*: 22948 *ESSENCE*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் திரைப்படப் பாடல்கள்" ஒருவரலாற்று நோக்கு

-நாகேசு தர்மலிங்கம்-

ஒரு மனிதனின் வாழ்வில் அவனுடைய குழந்தை பருவ நிகழ்வுகள் எப்படித் தொடர்கிறதோ அப்படியே தமிழ் சினிமாவிலும் இன்று ஆரம்பகாலப் பாடல்களின் தாக்கம் நீடிக்கிறது எனலாம். உலக சினிமாக்களில் இருந்து இந்தியச் சினிமாவை வேறு படுத்திக்காட்டுவது அப்படங்களில் இடம் பெறும் பாடல்களே. சினிமாவில் பாடல்கள் இடம்பெற லாமா இப்பாடல்கள் சினிமா இலக்கணத்தை அதன் பண்புகளை எவ்வாறு பாதிக்கிறது. என்பது பெரும் ஆய்வுக்குரிய விடயமாகும். எப்படியோ அன்று தொட்டு இன்றுவரை இப்பாடல்கள் தமிழ்சினிமாவை ஆக்கிரமித்து வருகின்றன. இதனால் தமிழ்திரைப்படப்பாடல் துறை என்று ஒன்று தனியாக வளர்ச்சி கண்டு பட்டி தொட்டியெல்லாம் வானொலி, தொலைக்காட்சி, கசட், ஒலிபெருக்கி என்ற சாதனங்கள் மூலம் நாளாந்தம் மக்களிடம் செல்கின்றன.

1916ம் ஆண்டு முதல் 1932ம் ஆண்டுவரை சென்னையில் ஊமைப்படங்கள் தயாரிக்கப்பட்ட காலத்தில் பாடல்கள் நிறைந்த இசை நாடகங்களே தமிழக மக்களின் பிரதான பொழுது போக்குச்சாதனமாக விழங்கியது. இதனால் நாடக நடிகர்கள் மேடையோடு நின்றார்கள் தவிர ஊமைப்படச் சினிமாவை நாடவில்லை. தமிழில் பேசும்படங்களின் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டதும் சென்னையில் பல புதிய சினிமா ஸ்ருடியோக்கள் உருவாக்கப்பட்டன. இதனால் நாடகசபாக்கள் வைத்து நாடகமாடிய நடிக நடிகையர்கள் சினிமாவை நாடத்தொடங்கினார்கள். இவர்களால் நடிக்கப்பட்ட நாடகங்கள் சினிமாப்படங்களாகத் தயாரிக்கப்பட்டன. இச்சினிமாப்படங்களில் இந்நாடகங்களில் இடம்பெற்ற பாடல்களும் புகுந்துகொண்டன நாடக மேடையில் எப்படிப்பாட்டுப்பாடும் குரல் வளம் படைத்த நடிகர்கள் பிரபல்யம் பெற்றார்களோ அதே போல் ஆரம்பகாலத் தமிழ்ச் சினிமாவிலும் இக்குரல் வளம் படைத்த நடிகர்களே பிரபல்யமானார்கள் இவர்களில் பி. யு. சின்னப்பா, தியாகராயாபகவதர், கே. ஆர். ராமசாமி. என். எஸ். கிருஷ்ணன், ரீ. ஆர். மகாலிங்கம், கே. பி. சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலெட்சுமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சினிமாத் தொழில் நிலைபெற்று தமிழகத்தின் முக்கிய வருமானம் தரும் தொழிலாக மாறியதால் பல கலைஞர்கள் இத்துறையை முழுதாக நம்பி வாழ்வில் வளம் பெற்றதோடு மக்கள் மத்தியில் பிரபல்யமும் அடைந்தார்கள். இவ்வாறு சினிமாத்துறை வருமானத்தையும் பிரபல்யத்தையும் தருவதால் கர்நாடக இசை வல்லுனர்களும் இச் சினிமாத்துறையால் ஈர்க்கப்பட்டார்கள். பாபநாசம்சிவன், ஜி. என். பாலசுப்பிரமணியம், தண்டபாணி தேசிகர், முசிரி, வி. வி சடகோபன், எம். எல். வசந்தகுமாரி, போன்ற சாஸ்த்ரீய இசை நட்சத்திரங்கள் தமிழ்ச்சினிமாவில் சுடர் விடத் தொடங்கினார்கள். சாஸ்த்திரியராகங்கள் சினிமாவிற்கு ஏற்ப எளிதாக்கப்பட்டுச் சுருக்கப்பட்டன. பெரும்பாலான பாமர ரசிகர்களுக்கு கர்நாடக இசை வழங்கப்பட்டது இதனால் தமிழ்ச்சினிமாவில் சுடர்விடத் தொடங்கினார்கள். சாஸ்த்திரிய ராகங்கள் சினிமாவிற்கு ஏற்ப எளிதாக்கப்பட்டுச் சுருக்கப்பட்டன. பெரும்பாலான பாமர ரசிகர்களுக்கு கர்நாடக இசை வழங்கப்பட்டது இதனால் தமிழ்ச்சினிமாவில் பாடல்கள் வேரூன்றத் தொடங்கின.

காலவோட்டத்தில் திரைப்படங்களில் இருந்து அப்படங்களில் இடம்பெற்ற பாடல்களுக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் வளரத்தொடங்கின. 1944ல் வெளிவந்த தியாகராயபாகவதரின் ''ஹரிதாஸ்'' படப்பாடல்கள் மூலம் இது ஆரம்பித்தது எனலாம் 133 கிழமைகள் ஓடிய அப்படம் இசைஅமைப்பாளருக்கு ஓர் நட்சத்திர அந்தஸ்தைக் கொடுத்தது எனலாம். இதைப் போன்று இன்னும் பல படங்கள் அதில் இடம்பெறும் பாட்டுகளுக்காகஓடுவதையும் அவதானிக்கலாம்பெறும் அன்று தொட்டு இன்றுவரை வெளிவந்த தமிழ்சினிமா பாட்டை அப்படியே இசைத்தட்டாகவும் ஒலியிழையாகவும் பாதுகாத்து மக்கள் மத்தியில் எடுத்துச்செல்வதில் உலக ஒலிபரப்பு நிலையங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முன்னணியில் உள்ளது என்றால் மிகையாகாது. 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வர்த்தக ஒலிபரப்புச்சேவையின் வளர்ச்சியை இத் தமிழ்த்திரைப் பாடல்களே நிர்ணயித்துள்ளன என்று கூறுவதோடு தமிழ்த்திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கும் இவ்வர்த்தகசேவை தனது பங்களிப்பை வழங்கியிருக்கிறது என்பதும் பேருண்மையாகும்.

ஒலிபதிவுத் துறையில் அவ்வப்போது ஏற்பட்ட தொழிற்நுட்ப வளர்ச்சி நம் சினிமாப்பாட்டின் பரிணாமத்தை நிர்ணயித்தது. அந்தக்காலத்து ''மைக்'' இல்லாத நாடக மேடையில் உச்சஸ்த்தாயில் கத்திப் பாடிய நடிகர் சினிமா ஒலிப்பதிவில் அடக்கிப்பாட வேண்டிய நிர்ப்பந்தத்தினால் தன் இசையின் தன்மையைமாற்றிக் குரலை அமுக்கி மெல்லியதாகப் பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பிற்காலத்தில் மெல்லிய குரலில் பாடும் பாடகர்களுக்கு வாய்ப்பு ஏற்படத்தொடங்கியது.

சினிமா வருவதற்குமுன்பே தமிழகத்தில் கிராமஃபோன் பாவனைக்கு வந்துவிட்டது. பேசும்படம் வந்ததும் அப்பாடல்கள் 3-4 நிமிடங்கள் நீடிக்கும் 78 RPM இசைத்தட்டுக்களில் வெளியிடப்பட்டன. சினிமாப் பாட்டின் நீளம் இந்தக் கிராமஃபோன் இசைத்தட்டு ஓடும் நேரத்தின் அளவால் தீர்மானிக்கப்பட்டது. இன்றும் அதாவது 7் RPM இசைத் தட்டு உருவாக்கம் நிறுத்தப்பட்ட பிறகும் சினிமாப்பாட்டுக்கள் 3—4 நிமிடங்களே நீடிக்கின்றன. ஆரம்பகாலத்தில் பாட்டுக்கள் தனியாகப் பதிவு செய்யப்படுவதில்லை காட்சிகள் படமாக்கப்படும்போதே ஒலிப்பதிவும் நடக்கும். காரணம் இருப்பது ஒரு மைக். ஒலிகளை ஒருங்கிணைக்கும் கருவி அக்காலத்தில் இருக்கவில்லை. ஒரு மைக் முன்னால் பாடுவதால் பல வாத்தியக்கருவிகளைப் பாவிக்கமுடியாது இரண்டு அல்லது மூன்று கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இதனாலேயே எல்லாப் பழைய பாடல்களிலும் பாடகரின் குரல் முன்னிற்க இசை நன்றாகப் பின் தள்ளி நின்று பாடல்களை விளங்கி ரசிக்கக் கூடியதாக இருக்கின்றது. இன்று இந்நிலை மாறித் தலைகீழாகவே உள்ளது. அதாவது ஒரு தொகை இசைக்கருவிகள் ஒன்று சேர்ந்து இசைக்கருவிகளின் ஒலம் முன்னின்று பாடகரின் குரல் பின் தள்ளப்பட்டு சந்தை இரைச்சல் போலாகி விடுகிறது.

இதற்குப் பின்பு வந்த பாரியமாற்றம் படத்தையும் ஒலியையும் தனித்தனியாகப் பதிவு செய்யும் முறையாகும். இந்தப்பாரிய தொழில் நுட்பமாற்றத்தினால் குரல்வளம் படைத்த பாடும் நடிகர்களின் காலம் முடிந்தது. முகவெட்டு, நடிப்பு, இவற்றிற்கு முக்கியத்துவம் வந்தது இதனால் பின்னணிப் பாடகர்கள் என்ற புதிய கலைஞர்கள் தோன்றினார்கள் சங்கீதத்துறையில் புகழ் பெற்ற விற்பன்னர்கள் பலரும் பின்னணிப்பாடகர்களாகச் சினிமாவிற்குள் புகுந்தனர். டி. கே. பட்டம்மாள், வசந்தகோகிலம் எம். எல். வசந்தகுமாரி, சீர்காழி எஸ். கோவிந்தராஜன், பாலமுரளி கிருஷ்ணா, கே. ஜே. ஜேசுதாஸ் போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆரம்பகால தமிழ்சினிமாப்பாடல்களில் பல விதமான இசைவகைகள் கலக்கத்தொடங்கின. தென்னாட்டுக்குரிய கர்நாடக சங்கீதத்தின் ஆளுமையே அப்படங்களில் பெரும்பாலும் காணப்பட்டாலும் மராத்தி, ஹிந்துஸ்த்தானி, மேற்கத்தைய இசைச்சாயல்கள், என்பன தமிழ்ப்பாடல்களாக மலர்ந்தன இக்காலத்தில் ஏற்பட்ட மேற்கத்தைய இசைக்கருவிகளின் வருகையும் தமிழ்த்திரைப்படப் பாடல்களின் இசையில் பெருமாற்றத்தை ஏற்படுத்தியது நாற்பதுகளில் ஹிந்திப்பாடல்களின் தாக்கம் தமிழ்ப்படங்களில் அதிகம் ஏற்படலாயிற்று. சினிமா இசைக்கும் சினிமாபாட்டுக்கும் அதிகமான வேற்றுமைகள் இருக்கின்றன. காட்சிப்படிமங்களுக்கு மெருகூட்டுவதுபோல ஒரு படத்தின் பின்னணி இசை சேர்க்கப்படுவது தவிர்க்கமுடியாததொன்றாகும் ஆனால் எதுவித சம்பந்தமும் இந்த பழக்கப்பட்ட ரசிகர்களை மனதில்கொண்டும் நாடகமேடையில் இருந்து வந்த மரபை நிலை நிறுத்துவதாகவுமே இப்பாடல்கள் அமைந்துவிடுகின்றன. சினிமாப்படத்திற்குப் பாடல்தேவை என்பதை விட பாரியபணம் போட்டுத் தயாரிக்கப்படும் தமிழ்ப் படத்தின் மூலம் அப்பணத்தில் பலமடங்குதொகையை ரசிகர்கள் மூலம் மீளப்பெறுவதற்கான தந்திரமாகவே படத்தில் இடம்பெறும் பாடல்களும் காட்சிகளும் அமைந்து விடுகின்றனபோலும்.

தமிழ்ச்சினிமாவின் அம்சமாக மட்டுமல்ல இன்றைய தமிழ்நாட்டுக்கலாசார அரசியல் வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகத் திரைப்பட இசை வளர்ந்துளளதை நோக்கலாம். தமிழ்ப்படம் பார்ப்போரில் 77 ./. வீதமானவர்கள் அதில் இடம்பெறும் பாடல்களுக்காகவே படம் பார்க்கிறார்கள என்று ஓர் ஆய்வுநிலையம் நடத்திய ஆய்வின் அறிக்கை கூறுகிறது. தமிழ்ச்சினிமாப்படத்தில் இடம்பெறும் பாடல்கள் இசைத்தட்டு, ஒலியிழை எனபவற்றில் பதிவாகி திருவிழா, திருமண விழா, களியாட்டங்கள் என்பவற்றில முதன்மை பெற்று விளங்குகின்றன. இது மட்டுமின்றி ஒலியிழைக் கொம்பனிகள், பாடல்கள பதிவு செய்து கொடுக்கும் சிறுகடைகள், பல ஒலிபெருக்கி நிலையங்கள், வர்த்தக ஒலிபரப்புக்கள், பாட்டுப்புத்தகங்கள், சினிமாப் பாடல்களைத் திருப்பிப்பாடும் இசைக்குழுக்கள் என்று பல்லாயிரக்கணக்கானோர்களுக்குத் தொழில்வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆரம்பகாலத்திரைப்படப்படல்களுக்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் பெரியளவிலான விரிசல் இருக்கவில்லை இப்போ அந்த நிலைமாறி புதுமை என்ற பெயரில் பாட்டின் பொருள், இசை, பாடுபவரின் குரல் என்று எல்லாம் தலைகீழாக மாறி சாம்பாராகி சிலவேளைகளில் சகிக்க முடியாத தன்மையையும் ஏற்படுத்திவிடுகிறது. பெரியளவு சாஸ்திரிய இசைப் பயிற்சி இல்லாதவர்கள் சினிமா இசைப்பாடல்கள் ரசிகர்களின் கைதட்டலும், ஒரு படத்தைப் பலதடவைகள் இந்தப்பாமர ரசிகர்கள பார்க்கவேண்டும் என்ற நோக்கோடும் செயல்படுவதை இக்காலப்பட்டல்கள் மூலம் நாம் அறியக் கூடியதாக உளளது. ஒரு சில பாடல்கள் சகல அம்சங்களும் பொருந்தி வெளிவந்து மக்கள் மத்தியில் உயர் ரசிகத்தன்மையை ஏற்படுத்திய போதிலும் பெரும்பாலானபாடல்கள் ஓரம்போய் விடுவனவாகவே உள்ளன.

சிறந்த ஒலிப்பதிவு வசதியின்றி அதற்கேற்ப இசைக்கருவி வசதிகள் இன்றி இசையமைப்பாளர்களாலும் குறிப்பாகப் பாடகர்களாலும் முன்னணிவகித்து முக்கி

(26ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் பொருள் வாழ்தலில் உள்ளது.

-கரிச்சான்குஞ்சு

கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் நான் அனுபவித்ததை சுவர்க்கபோகம் என்றால், அதில் இருந்த பாபக்கலப்பினால் நேர்ந்த நரகவேதனையோ இது? சுகம் ஒரு அனுப வம் என்றால் துக்கமும் ஒரு அனுபவம் தானே? வாழ்வு என்பதே ஒரு அனுபவம் தானே? அனுபவித்து கடப்பது தானே? நேர் வதெல்லாம் நேரட்டும் அனுபவிப்பதை எல் லாம் அனுபவிப்போமே!

இந்த அனுபவங்கள் மூலம் என்னையே நான் கடக்கும்-கடந்து புதிய நிலை பெறும் வாய்ப்பும் -நேரலாமோ? என்பழைய உடல் செத்துப்போய்ப் புதிய உடல் தோன்றியதை அணு அணுவாக கணம் கணமாக உணர்ந்து கொண்டே இருந்திருக்கிறேன்.

பழைய மனம்தான் புதிய உடலையும் காட்டுகிறது. ஆட்டுகிறது அலைக்கழித்து ஓட் டுகிறது. கண்ணாடியில் பார்க்கிறேன். என் முகம் எனக்கு அடையாளம் தெரியவில்லை. குனிந்தும் கூர்ந்தும் என் கண்களால் காணக் கூடிய என் கைகால்களே எனக்குப் புதியவை யாய் இருக்கின்றன. ஆனால் பழைய மனமும் நினைவும் இருப்பதால்தான் இந்த விகாரப் பட்டு விட்டமுகமும் உறுப்புக்களும் என்னு டையவைதான் என்று அறியமுடிகிறது என்ப ழைய நினைவுகளும் மறந்துவிட வில்லையே'

இந்தப் பழைய மனத்தையும் கடந்து அப் பால் செல்ல வாய்ப்பு நேரலாமோ, பார்ப் போமே. இனி வைத்தியம் வேண்டாம். கையி லிருக்கும் பணத்தைகூட ஏதோவொரு தர்ம ஸ்தாபனத்திடம் கொடுத்துவிட்டு கிளம்பிவிட வேண்டும் ஊர்ஊராய்ச் சென்று கிடைத்தால் உண்பது கிடைக்காவிட்டால் பட்டினிகி டப்பது. அதையும் ஓர் அனுபவமாகக் கொண்டு மேலும் என்னைக்கடக்க முயலு வது இந்த முயற்சிகளில் நான் அடையும் வெற் றியோ தோல்வியோ எனக்குத் தவமாகட் டுமே.

தனிமையும் சிந்தனையும் சகஜமாக வரும் எனக்கு அவையே யோகமாய் அமையட் டுமே...!

'பசித்த மானுடம்'

---

(25ம் பக்கத் தொடர்ச்சி)

யத்துவம் பெற்ற பல தமிழ்பாடல்களையும் நாம் அவ தானிக்கக் கூடியதாக உள்ளது. திருச்சிலோகநாதன், ஏ. எம். ராஜா, கண்டசாலா, பி. பி. ஸ்ரீனிவாஸ், ரீ. எம்.சௌந்தரராஜன், ஜிக்கி, பி. லீலா, ஜமுனாராணி, எல். ஆர். ஈஸ்வரி, பி. சுசிலா போன்ற பாடகர்களும், ஜி. ராமநாதன், ஜி. கே. வெங்கடேஷ், கே. வி மஹா தேவன், எம்.எஸ். விஸ்வநாதன்-ராமமூர்த்தி போன்ற இசையமைப்பாளர்களும் இக்காலகட்டத்திற்குரியவர் களாக விளங்குகிறார்கள். இவர்களின் கூட்டு முயற்சி யினால் உருவானபாடல்கள் இன்றும் நிலைத்து நின்று காலக்கண்ணாடியாகவுள்ளதையும் நோக்கலாம்.

இன்று நாளுக்குநாள் அசுரவேகத்தில் தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருவதால் பெருந்தொகை யான பாடல்களும் அதையொட்டி வருகின்றன. புதிய புதிய இசையமைப்பாளர்களும் பாடகர்களும் அறிமுக மாகிவருகிறார்கள். இவற்றில் ஒன்றிரெண்டு அத்திபூத் தாப்போல் தரமானதாகக் காணப்பட்டாலும் பெரு ம்பாலானவை இந்த அவசர யுகத்திற்குரியனவாகவே தோன்றி அவசரமுடிவுகளையும் எதிர்நோக்கிவிடுகின் றன. எஸ். பாலசுப்பிரமணியம், மலேசியா வாசுதேவ ன், மனோ, அருண்மொழி எஸ். ஜானகி, சித்திரா, சுவர்ணலதா, மினிமினி, போன்ற பாடகர்களும் இளையராஜா, சங்கர்-கணேஷ், தேவா, சந்திரபோஸ், ரஹ்மான், போன்ற இசையமைப்பாளர்களும் இந்த வரிசையில் இடம்பெறுகிறார்கள்.

தமிழ்த்திரைப்படப்பாடல்களின் வரலாறு வெறும் காலவோட்டமாற்றத்தின் பரிணாமமாக உள்ளதேய ன்றி ஏனைய துறைபோன்று தரமானதாக வளர்ச்சிகா ணது மாறுபட்ட தன்மையுடையதாகவே விளங்கு கிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் இரண்டு நாட்கள் பலத்த மழை கூடக் கொட்டியது. வானமே கூரையாகிவிட்ட சாமிநாதனின் வீட்டிலே இவர்களால் எப்படி இருக்கமுடியும்? இங்கே வந்து விட்டார்கள்.

வீட்டுக்கு முன்னே தெருவில் ஒரு கார் வந்து நிற்கிறது. யாருமே இறங்கிவரக் காணோம்...

அன்னம்மாவால் இயலாமை காரணமாக எழுந்து செல்ல முடியவில்லை. குழந்தை வயிற்றுடன் இருக்கும் பூரணத்துக்கு சிரமம் கொடுக்க விரும்பாத வசந்தி தனே வெளியே சென்று பார்த்தாள்...

காரில் வந்தவர்களில் கணவனின் சகோதரிகள் இருந்தனர். செல்வராசா அவளையும் குழந்தைகளையும் அழைத்துவரச் சொன்னதாகத் தகவல் தெரிவித்தனர்

வசந்தி திரும்பி வந்து தனது முக்கியமான உடைமைகளை ஒரு கூடைக்குள் எடுத்துக்கொண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தாயார், அண்ணி, வீட்டுக்காரர் அனைவரிடமும் மௌனமாக விடை பெற்றுக் கொண்டாள்.

வீட்டுக்காரர்கள் ஒரு கொலைகாரனுடன் எப்படி வாழப்போகிறாள்? என ஆச்சரியப் பட்டார்கள்.

பூரணம் தனது கணவனின் மறைவுக்குக் காரணமாக இருந்தவனிடம் இவள் போகிறாளே என வேதனைப்பட்டாள்.

அன்னம்மா வாய்விட்டே கேட்டாள். ''என்ன பிள்ளை இவ்வளவுக்குப் பின்பும் அவனுடன் போகத் துணிந்து விட்டாயோ...''

வசந்தி அழுகையை அடக்கியவாறு பதிலளித்தாள் ''என்ன செய்வது அம்மா. என்ன இருந்தாலும் அவர் என் கணவராயிற்றே.''

(யாவும் கற்பனை)


# பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் கெ. ஜனகன்.

(லண்டன்)

திரு கெங்கா வசந்தி ஆகியோரின் முதல் மகன் ஜனகன் தனது ஏழாவது பிறந்த நாளை தம்பி ஜதீசனுடன் லண்டனில் களிபேருகையுடன் கொண்டாடினார். இவர்களை எல்லா நன்மைகளும் பெற்று வாழ்கவென அப்பா அம்மா பெரியப்பாமார் பெரியம்மாமார் சித்தப்பாமார் சித்திமார் மாமாமார் மாமிமார் தாத்தாமார் தாத்திமார் **Dr.** சிவா சித்தப்பா சித்தி ஆகியோர் கிராஞ்சி முருகன் திருவருளோடும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருவருளோடும் வாழ்த்துகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

// வாழ்க்கை
(VAARLLZKHAI)
உண்மை நேர்மை கடமை - இவையே வாழ்வின் தலைமை

குமிழ்-4 வைகாசி ஆனி 1993

## துளிகள்!

ஈழத்துச் சிவானந்தன் புங்குடு தீவை சேர்ந்தவர். இவருடைய சகோதரர் சிவராமலிங்கம் இந்துக்கல்லூரியில் பணிசெய்தார். இந்துக்கல்லூரி நிர்வாகிகள் நமக்கும் பெரியாருக்கும் உள்ள நட்புக்கருதி முதலில் மறுத்தனர் ஈழத்துச் சிவானந்தன் போராடி வெற்றி பெற்றார். ஈழத்துச் சிவானந்தன் துடிப்புள்ள இளைஞர். நல்ல சொற்பொழிவாளர் நம்பால் கனத்த அன்புடையவர். நமது ஈழத்துச் சொற்பொழிவுகள் நூலின் தொகுப்பாசிரியர்.

- தவத்திரு குன்றக்குடி அடிகளார்
( 7. 03. 93 ஆனந்த விகடனில் )

## துளிகள்!

ஈழத்துச் சோமுவின் சமூகப்பார்வை மிகவும் விரிந்த தாகவும் ஆன்மீகமும் சமத்துவமும் இணைந்ததாகவும் சீரான கருத்து வீச்சுக்களைக் கொண்டதாகவும் இருப்பது குறிப்பிடதக்கது.

இலங்கையில் எத்தனையோ தமிழ் எழுத்தாளர்கள் சிறந்த இலக்கியங்களைப் படைக்கின்ற போதும் இலட்சக்கணக்கானவர்கள் தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்த போதும் பதிப்பகங்கள் சரியான முறையில் பங்களிப்புச் செய்யாததால் விற்பனை வசதிகளும் விநியோக அமைப்பும இல்லாமல் எழுத்தாளர்கள் விரத்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

—உடுவை எஸ். தில்லைநடராஜா——
(சோமகாந்தன் நூல்கள் வெளியீட்டு விழாத்தலைமை உரை)

யாழ்ப்பாணப்பொங்கல் விழா கமக்காரர் விழாவாக பாட்டாளிகளின் விழாவாக தமிழ்ப் பண்பாட்டு விழாவாக விளைவுக்கு உதவும் கதிரோனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக, பழையன நீங்கி புதியன புனைந்து, புதியன கொண்டுவந்து கொடுக்கும்என்ற நம்பிக்கையின் நுழைவாயில் விழாவாக யாழ்ப்பாண மக்கள் கொண்டாடினார்கள் அந்தப் பண்டிகை பற்றிய நினைவுகளிலே தோய்தல் எத்தகைய சுகமான அனுபவமாகவும் இருக்கிறது.

—எஸ். பொன்னுத்துரை
(''நனவிடை தோய்தல்'' நூலில்)

- தர்மு-

சிவகங்கா வெளியீடு
SIVAGANGA PUBLICATONS
98,, விவேகானந்த மேடு,
கொழும்பு-13.

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.

விவேகானந்த மேடு 98ம், இலக்கத்திலுள்ள சிவகங்கா வெளியீட்டினருக்காக வழக்கறிஞர் ப. கதிரவேலு J. P. U. M. அவர்களால் சங்கர் சன்ஸ் பிரிண்டர்ஸ் 98, விவேகானந்த மேடு. கொழும்பு-13ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாழ்க்கை' இதழே
வாழ்க்கை இயல்பை இனிமையாக்குக

# KALA TRADERS

151, DAM STREET
COLOMBO - 12

T. Phones 448747 - 438448
435284 - 435272

**KALA TRADES CENTRE**
95, OLD MOOR STREET
COLOMBO - 12.

TEL: 432014

**KALA ENTARPRISES**
222, PRINCE STREET
COLOMBO - 12.

TEL: 326562

வாழ்க்கையே வாழ்க்கை ! எங்கள்
வாழ்க்கையின் அருமை தன்னை
வாழ்ந்தலோ பார்க்க வேண்டும்.

# KUMARAVEL COY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS, DEALERS IN PROVISIONS

217,5th CROSS STREET
COLOMBO - 11.

Phone: 421057



PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாழ்க்கை' வளர்க
மனிதம் சிறக்க
மனம் கனிந்து வாழ்த்துகிறோம்

# Lanka Vinyl Limited

MANUFACTURERS & EXPORTERS OF PVC LEATHERCLOTH PVC SPONGE LEATHER AND PVC SHEETING

Telephone. 435006 - 320180.
Telex: 22871 - Vinylce.
Fax: 439656 Vinyl.

208, SEA STREET
COLOMBO - 11
SRI LANKA (Ceylon)

P.O. Box 1846

வாழ்க்கையே வணக்கம்
சுணக்கம் இல்லாச்சுகம் தருவாயே !

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY

# KANCHEE VIHAR

93, CHATHAM STREET
COLOMBO - 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org